வரவு எண் : 954.93
... எண் : 17192

FOR REFERENCE USE
ONLY

# சம்மாந்துறையின் குடிகள்

(குடிகள்பற்றிய ஒரு ஆய்வு)

## -31.12.2010-

THIS IS YOUR BOOK
PLEASE KEEP CLEAN

Donated by. 2011/11/

S.L. ATHAM BAWA J.P.
Rtd Director of Education
63, Central Road
Sammanthurai - 07

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai

11 NOV 2011

17192

வரவு எண் :
... எண் :- 954.93

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai

11 NOV 2011

அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

# பொருளடக்கம்


1. கணக்கன் கத்தர குடி 1-2
2. மாமனாப்போடி குடி 3-4
3. தேன் முதலி குடி 5-6
4. வெள்ளரசன் குடி 7-8
   (பெரிய வெள்ளரசன் குடி,சின்ன வெள்ளரசன் குடி)
5. சங்கதி குடி 9-10
6. இராசம்புள்ள குடி 11-12
7. சுல்தான் குடி 13-14
8. கோசப்பா குடி 15-16
9. சேனைக் குடி 17-18
10. படையான் குடி 19-20
    (பெரிய படையான் குடி,பெரிய படையாண்ட குடி)
11. ஆதம்பட்டாணி குடி 21-22
12. ஓடாவி குடி 23-25
    (நெய்னா ஓடாவி குடி, காலிங்கா ஓடாவி குடி, கச்சன் ஓடாவி குடி)
13. வடக்கனா குடி 26-27
14. மாந்தரா குடி 28-29
15. செட்டிபுள்ள குடி 30-31
16. உதுமான்புள்ள குடி 32
17. உலவிப்போடி குடி 33-34
18. பட்டி சிங்கி பவள ஆராய்ச்சி குடி 35-36
19. மாப்பிள்ளை மரைக்கார் குடி 37
20. நாச்சியார் குடி 38-40
    (வைத்திய நாச்சியார் குடி, மூத்த நாச்சியார் குடி, பொன்னாச்சியார் குடி)
21. சேர்முகம்மது குடி 41-42
22. மடத்தடி குடி 43
23. பணிக்கனா குடி 44-45
24. கையூம் மலையார் குடி 46-47
25. மலையாளத்து லெப்பை குடி 48-49


FOR REFERENCE USE
ONLY

THIS IS YOUR BOOK
PLEASE KEEP CLEAN

# கணக்கன் கத்தர குடி

இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்
அல் ஹாஜ் SM.பதூர் (JP), ஓய்வு பெற்ற தர மதிப்பீட்டாளர் (NPC)
பதூர் மஹால், பஸார் 2ம் வீதி, சம்மாந்துறை 05.
TP.NO: 0673676079.

இக் குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்.

1. ஜனாப் A.அகமது லெப்பை போடி (அவுதியாப் பிள்ளை)
2. ஜனாப் MM.இஸ்மாயில் என்ஞினியர் (இஸ்மாயில் துரை)
3. ஜனாப் KP.உதுமாலெப்பை வ.வி (கிடுகிடுப்பர் வ.வி)
4. ஜனாப் MT.மீராலெப்பை (கண்ணட்டியர் வ.வி)
5. ஜனாப் ML.அப்துல் காதர் (சந்தனத்தர் வ.வி)
6. அல் ஹாஜ் ML.காதர் மீராசாஹிப் அதிபர் (காதர் மாஸ்டர்)

இக்குடியை "கனக்க கற்றவர்களைக் கொண்ட குடி" என்றும் "கணக்கற்றவர்களைக் கொண்ட குடி" என்றும் "அல்லிப்பூ குடி" என்றும் அழைப்பர். ஐரோப்பியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் டச்சுககாரரின் நிருவாகத்தில் அரச கணக்குகளை பதிவு செய்யும் பதவி நிலை இருந்து வந்துள்ளது. இவர்களை "கணக்கன்" என்று அழைத்தனர். கணக்கன் என்ற பிரிவினர் இந்தியாவில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா, டெல்லி, கேரளா போன்ற இடங்களில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள் என்பதும், சிறிய தொகையினர் இந்துகள் என்பதும் தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

மத்திய கிழக்கைச் சேர்ந்த அரபு வர்த்தகர்கள் இந்தியாவிற்கு வர்த்தக நோக்கில் வந்த போது கணக்கன் இனத்தைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்து கிழக்கிலங்கையில் குடியேறி வாழ்ந்து வந்துள்ளனர். அப்போது தென்கிழக்கில் தாய்வழிக் குடிமுறை பின்பற்றப்பட்டு வந்தமையால் "கணக்கன் கத்தர குடி" தோற்றம் பெறலாயிற்று. இங்கு வந்தவர்களில் பெரும்பாலானோர் கேரளா நாட்டு பெண்களாகவும், மொரோக்கோ, சிரியா, ஈராக் நாட்டைச் சேர்ந்த ஆண்களாகவும் இருக்கலாம் என சரித்திர ஆசிரியர்கள் சான்றுபகிர்கின்றனர். இதை உறுதிசெய்யும் வகையில் மேற்கூறியவர்களின் சாயலில் உள்ள ஆண்களையும் பெண்களையும் நீர்ப்பாய்ச்சல் வன்னியனார், கோசுப் போடியார், கொஸ்தாப்பர் குடும்பங்களில் உள்ளவர்களில் காணக்கூடியதாகவுள்ளது. இக்குடி கிட்டத்தட்ட 6000 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை சம்மாந்துறையில் கொண்டு விளங்குவதும் பழங்குடிகளில் ஒன்றாக பட்டியியல் இடப்பட்டிருப்பதும் அறியவருகின்றது.

மேலும் கணக்கன் கத்தர குடியை சேர்ந்தவர்களை "கணக்கில் சிறந்தவர்கள்" என்றும் "கனக்க கற்றவர்கள்" என்றும் கூறுவதுண்டு. இக்குடியைச் சேர்ந்தவர்கள் படிப்பு வசதி குறைந்த காலத்தில் கூட படிப்பில் சிறந்து விளங்கியிருக்கின்றனர், விளங்குகின்றனர் என்பதற்கு சான்றாக 1920 இல் மருத்துவக் கல்வியைக் கற்ற Dr.ஒஸ்மன் அவர்கள் தங்கப் பதக்கம் பெற்று முஸ்லிம்களில் முதலாவது டொக்டராக திகழ்ந்ததும், அவரின் சகோதரர் MM.இஸமாயில் என்ஞினியர் அவர்கள் பொறியியல் துறையில் பூரணத்துவம் பெற்று விளங்கியதும், அவரின் சகோதரர் MM.அலி அவர்கள் வன்னியனாராக திகழ்ந்ததும், MA.அப்துல் மஜீட் அவர்கள் கிழக்கிலங்கையிலே முதலாவது BA பட்டதாரியாகவும், அமைச்சராகவும் திகழ்ந்தமையும், ALM.மீராசாஹிப் அவர்கள் நீதிபதியாகவும், Dr MM.பாறுக் அவர்கள் மிருக வைத்தியராக விளங்கியதும் Dr SMM.இஸ்மாயில் அவர்கள் துணைவேந்தராகவும், Dr AA.றிபாஜ் அவர்கள் ஆங்கில மருத்துவ பட்டத்துடன் தொடுகை வைத்திய துறையிலும் பட்டம் பெற்று சிறந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் AM.மேஸா, சட்டத்தரணி ULM.முஹிடின், AMM.நௌசாட் ஆகியோர் பாராளுமன்ற பிரதிநிதிகளாக விளங்கியதும் IA.ஹமீட் அவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளராக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. மேலும், UM.மீரான்சாஹிப் அவர்கள் காழியாராகவும், MA.அமீரலி அவர்கள் பட்டிண சபை தவிசாளராகவும் இ.போ.சபைத் தலைவராகவும், MA.அப்துல் றஸாக் அவர்கள் அதிபராகவும் இ.போ.சபைத் தலைவராகவும், SL.உதுமாலெப்பை அவர்கள் கிராம சபைத் தலைவராகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

இன்னும் இக்குடியின் கற்றவர்களைப் பற்றி ஆராய்வோமாயின், ஜனாப் MI.கலந்தர்லெப் அவர்கள் சட்டம்பி வாத்தியாராகவும், ஜனாப் MIL.பக்கீர் தம்பி அவர்கள் முதலாவது பயிற்றப் ஆசிரியராக "ஈழமேகம்" பட்டத்துடனும், ஜனாப் MI.கோஸ் முஹம்மட் அவர்கள் "அதிபர் ம பட்டத்துடன் அதிபராகவும், ஜனாப் MLK.மீராசாஹிப் அவர்கள் அதிபராகவும் சிறிது கா குடிமரைக்கார் சம்மேளனத் தலைவராகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் காதர் மீராசாஹிப் லெவ்வை (பொட்டகத்தப்பா), MM.ஆதம்லெவ் (சின்னப்பள்ளி லெப்பை) ஆகியோர் குத்பா பிரசங்கம் நிகழ்த்தும் இமமாக திகழ்ந்தமையும், ஜன அல்லிலெப்பை (செயிலான் மரைக்கார்), அல் ஹாஜ் UMA.கபூர் ஆகியோர் பிர நம்பிக்கையாளர்களாக கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

இக்குடியில் இந்துக்களும் சிறிதளவு காணப்படுவதாக சரித்திரசான்றுகள் உள்ளதால் இக்குடி "அல்லிப்பூ" குடி என்ற பெயரும் ஆதியில் இருந்திருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது. ஆன சம்மாந்துறையில் அப்பெயர் வழக்கில் இல்லை.

மேலும் இக்குடியின் சேவையை ஆராய்வோமாயின் இக்குடியின் மரைக்காராக இருந்து ஓ பெற்ற MM.இஸ்மாயில் என்ஜினியர் அவர்கள் 1978ம் ஆண்டில் இருந்த நம்பிக்கையாளருக் புதிதாக தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கையாளர்கள், வக்பு சபை, பொதுமக்கள் ஆகியோருக்கிடை ஏற்பட்டு தீர்க்க முடியாதிருந்த பிணக்கை அப்போது குடிமரைக்காரர்களாகவும், உதவியாளர்களாக இருந்த ஜனாப்களான SL.ஆதம்பாவா (Rtd DE), I.மீராலெப்பை ஹாஜி, AR.முஹமதலி (Rtd P MM.மேர்ஸா (Rtd Eng) ஆகியோரின் உதவியுடன் தமது செலவில் நீதிமன்றம் வரை செ சுமூகமாக தீர்த்து வைத்ததும் இன்று வரை பள்ளிவாசல், ஊர் நிருவாகங்கள் எதுவித பிரச்சினைக இல்லாமல் திகழ வழி வகுத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர் குடிமரைக்கார்கள் சில உதவியோடு மேற்கொள்ளப்பட்ட சேவையாக எடுத்துக்கூறக்கூடியதும் பாராட்டப்படக்கூடியதுமாகும்.

அதுமட்டுமல்லாமல் இக்குடியின் உபதலைவரான ஜனாப் AR.முஹமதலி அவர்கள் மேற்படி 19 பிரச்சினையை தீர்ப்பதில் "ஜிஹாத்" செய்வதற்கும் முன்வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயங்களை அவதானிக்கும் போது இக்குடியைச் சேர்ந்தவர்களில் கூடிய தொகையி இருப்பதும் அறிவு, ஆற்றல், நீதி, நேர்மை, சமூக சேவை, நிர்வாகத்திறமை மிக்கவர்கள திகழ்ந்துள்ளனர், திகழ்கின்றனர் என்பதும் அறியவருகின்றது.

தகவல் வழங்கியோர் :
1. திருமதி பழீலா முகம்மதலி (அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களின் சிறிய தாய்)
2. Dr. SMM.இஸ்மாயில் (துணைவேந்தர் தென்கிழக்கு பல்கலைக்கழகம்)
3. MI.கோஸ் முஹமட் (அதிபர்மணி)
4. AM.நௌஷாட் (முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)
5. MA.அப்துல் றஸாக் (ஓய்வு பெற்ற அதிபர்)
6. IA.ஜப்பார் (A D A)
7. MIM.நபீஸ் (முகாமைத்துவ உதவியாளர் - ஜனாதிபதி காரியாலயம்)



## மாமனாப்போடி குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**
அல் ஹாஜ் சுலைமாலெவ்வை முகம்மது முஸ்தபா (JP)
ஓய்வு பெற்ற கிராம அலுவலர் (GNS)
64, முங்கிலடி வீதி, சம்மாந்துறை 04.
TP.NO: 0672260114.

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**
1. முகம்மதிஸ்மாயில்லெவ்வை போடி (அதிபர் மணி கோஸ்முஹம்மதுவின் தகப்பன்).
2. உதுமாலெவ்வை சுல்தான்மரைக்கார்.
3. முகைதீன் பாவா போடி ஆதம்லெவ்வை போடி (எக்கல் போடியார் மகன்).
4. முகம்மது அலியார் (வாப்பாபுள்ள மகன் சிட்டுக்குருவியர்).
5. அல் ஹாஜ் சுலைமாலெவ்வை அலியார் (சொர்க்கர் அலியார்).

இக்குடிக்கு "மகா மன்னன் போடி குடி" என்றும் ஒரு பெயர் உண்டு. பொலனறுவையை ஆட்சி செய்த "புலன்" என்றழைக்கப்பட்ட அரசன் தமிழ் மக்களை பலவகையிலும் இம்சைப்படுத்தி வருவது வழக்கமாகயிருந்து வந்துள்ள சம்பவங்களாகும். வயதுவந்த அழகான பெண்களைக் காலத்துக்கு காலம் கவர்ந்து செல்வதும் அவனது இம்சைகளிலுள்ளதாகும்.

இப்படியான சம்பவங்களைச் சகிக்காத இக்குடியின் முக்கியஸ்தரான "மாமன்னர் போடி" என்பவர் தமது மக்களை காப்பாற்றுவதற்காக, அரசனையும், அவனது பிரதானிகளையும் விரட்டியடிப்பதற்கான முயற்சியொன்றில் ஈடுபட்டார். அப்போது வியாபார நோக்கமாக கிழக்கிலங்கைக்கு வந்து கொண்டிருந்த பட்டாணியர்களின் உதவியினால் விரட்டியடிக்கப்பட்டு அம்மக்கள் காப்பாற்றப்பட்டனர். இம்முயற்சியில் மாமன்னர்ப்போடி ஈடுபட்டதனால், அவர் சார்ந்த மக்களுக்கு அவர் பெயர் கொண்டு அக்குடிக்கு பெயர் வழங்கப்படலாயிற்று. "மாமன்னர் போடி" என்பது மருவி "மாமனாப் போடி குடி" என வழங்கப்படலாயிற்று.

மேலும் இவ்வரசனது செயல்களிலிருந்து தமது பெண்களை காப்பாற்றுவதற்காக இக்குடியைச் சேர்ந்தோர் தமது வீடுகளின் முன்னால் அரசனும் அவனது பிரதானிகளும் விஜயம் செய்யும் போது "பறை" அடித்துக் கொண்டிருப்பர். அரசனும் பிரதானிகளும் இவர்கள் "பறயர்" என விலகிச் செல்வதுண்டு. இத்தந்திரத்தைக் கையாண்டு இக்குடியினர் தமது பெண்மக்களைக் காப்பாற்றிக் கொண்டனர். இதனால் இக்குடியினரை "பறக்குடியினர்" என்றழைப்பதுமுண்டு.

"பாப்பார் குலத்திலையும் பறையர் குடி மேற்குலமாம்
கேட்பார் இல்லாமல் கீழ்சாதியாகிட்டாங்க"

என்று இக்குடியினரை உயர்த்தியும் தாழ்த்தியும் மற்றைய குடியினர் வம்புக்கிழுப்பதுண்டு. "மாமனாப்போடியாட்கள் மான் கொம்பில் நெருப்பு எடுப்பவர்" என்று அக்குடியினரை உயர்த்திப் பேசும் நிகழ்வுகளுமுண்டு.

மாமனாப்போடி குடிப்பெண்கள் பயபக்தியானவர்கள் என்பதற்கு வாய்வழிவந்த சம்பவமொன்றை அக்குடியைச் சேர்ந்த வயது முதிர்ந்த மூதாட்டியொருவர் தனது சிறுவயதில் நடந்த அந்த நிகழ்வை ஞாபகப்படுத்தினார். சிரங்கு, காயம் என்பன ஆறாட்டி (சுகப்படாட்டி) "கண்ரொட்டி" செய்து, மாமனாப்போடி குடியைச் சேர்ந்த "பெரியாப் பெத்தா" என்பவரிடம் பெட்டியில் வைத்து, வெள்ளையால் மூடி சிரங்கு, காயம் சுகப்பட வேண்டுவர். பெரியாப் பெத்தாவும் துஆ செய்து சிரங்கு, காயத்தில் தமது உமிழ் நீரால் தடவிவிடுவார். சில நாட்களில் சிரங்கு, காயம் சுகப்பட்டு விடும். இவ்வாற்றல் பரம்பரை பரம்பரையாக மாமனாப்போடி குடிப் பெண்கள் சிலரிடம் இருந்து வந்துள்ளதாக ஏனைய குடியைச் சேர்ந்தவர்களும் குறிப்பாக வயதானவர்களும் குறிப்பிட்டுள்ளனர். சனத்தொகை கூடிய குடிகளில் மாமனாப்போடி குடியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் இக்குடியை "மாமனாப்பிள்ளை குடி"யென்று அழைப்பர். சாய்ந்தமருது, பாலமுனை, கல்முனைக்குடியிலும் "மாமனாப்போடி குடி" என்பதே வழக்கத்தில் இருந்து வருகின்றது.

பட்டானியர்களுக்கும், மாமனாப்போடிக்கும் இடையிலான நல்லுறவின் வளர்ச்சியினால் அக்குடியைச் சேர்ந்த பல பெண்களை பட்டானியர்கள் திருமணம் முடித்த வகையினாலும், குடும்பமாக பலர் இஸ்லாத்தை ஏற்றதினாலும் முஸ்லிம்களிடத்தில் இக்குடி பெயர்பெற்று வழங்கலாயிற்று.

இக்குடியின் மரைக்காராக இருந்த அல் ஹாஜ் SM.அலியார் அவர்கள் குடியின் செயற்பாடுகளி மிக அக்கறை உடையவராக இருந்தது மட்டுமல்லாது "தப்லீகுல் இஸ்லாம" அரபு கலாசாலை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்குடியின் மரைக்காராக இருக்கின்ற அல் ஹாஜ் SL.முகம்மது முஸ்தபா (JP) அவர்க மரைக்காராக வந்ததிலிருந்து இக்குடியின் நடைமுறைகளை பேணுவதில் மிகவும் அக்கறை காட்டுவது குறிப்பிடத்தக்கது. இவர் சம்மேளனத்தின் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு செயற்படுவதை இக்குடியினர் தமது குடிக்களித்த கௌரவமாக கருதுகின்றனர்.

தகவல் வழங்கியோர்:

1. அல் ஹாஜ் மஹ்றூப் ஆதம் (TA) 1ம் குறுக்குத்தெரு, சம்மாந்துறை-06
2. ஜனாப் UL.இப்றாலெவ்வை (Teacher) ஹிஜ்ராசந்தி, சம்மாந்துறை.



## தேன் முதலி குடி

இக்குடியின் தற்போதய குடி மரைக்கார்
அல்ஹாஜ் AL.ஹபீப் முகம்மது Rtd. சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோஸ்தர்,
27, அம்பாரை வீதி, சம்மாந்துறை-02.
TP.NO: 0672260435

இக்குடியின் முன்னாள் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்

1. MTP.ஹபீபு முஹம்மதுஹாஜி அபீபுமுகம்மது ஹாஜி (ஜப்போடியார்ஹாஜியார்)1896-1918
2. SLA.உமர்லெவ்வை மரைக்கார் (பழையசேமன் தகப்பன்) 1918-1938
3. MTH.முகம்மது யாசின் ஹாஜி(யாசின் வட்டானை) 1938-1980
4. ULH.அலியார் லெவ்வை ஹாஜி (பெரியவெளி வட்டானை) 1980-1987
5. அல் ஹாஜ் A.அப்துல் கரீம் அதிபர் (கரீம் மாஸ்டர்) 1987-2001

இக்குடியை "கொஸ்கொட்டான்" குடி என்றும் அழைப்பர். இக்குடியின் ஆரம்பம் மேல்மாகாணத்தைச் சேர்ந்த "கொஸ்கொட" என்ற ஊரில் இருந்து கல்முனை-மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு "ரஜபாஸாவ" என்ற பிரிட்டிஷ் அரசின் நியமனத்துடன் கடமை புரிய வந்த இப்றாலெப்பை என்பவர் தனது கைம் பெண்ணான தாயுடனும், மூன்று சகோதரிகளுடனும் வந்து கரவாகுப்பற்றில் (கல்முனை-சாய்ந்தமருது) நிரந்தர குடிகளாக வாழத் தொடங்கினர்.

பிரிட்டிஷ் படையின் அட்டகாசங்களில் இருந்து தனது பெண் மக்களின் கற்பை பாதுகாக்கும் சிறந்த இடமாக இப்பகுதி காணப்பட்டதால் தாயும் மகனும் பெண்மக்களும் இங்கேயே வாழத் திட்டமிட்டனர்.

இதேவேளை கல்முனைக்கு வருகை தந்த வேட்சித்துரையால் கரவாகுபற்றில் தீவுவட்டையில் ரஜபாஸாவ முதலி அவர்களின் தாயின் பேரில் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை "அவ்வாடவெளி" என்னும் நெற்காணி கொடுக்கப்பட்டு பின்னர் அக்காணி தனது மூத்த இருமக்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. இதே போல் அதே அவ்வா உம்மாவுக்கு நிந்தவூரிலும் . "அவ்வாடவெளி" என்னும் நெற்காணி கொடுக்கப்படுகின்றது. அக்காணி பின்னர் இதே ஊரில் திருமணம் செய்த மூன்றாவது மகளுக்கும், மகனுக்கும் கொடுக்கப்படுகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் குடிகள் தாய்வழிப்பரம்பரை இருந்து ஆரம்பிக்கின்ற படியால், இந்த மூன்று பெண் மக்களின் சந்ததிகளை இப்றாலெவ்வை முதலியாரின் தொழிலை மையமாக வைத்து "கொஸ்கொட ரஜபாஸாவ முதலி" குடி என்று இக்குடி அழைக்கப்பட்டலாயிற்று.

"கொஸ்கொட ரஜபாஸாவ முதலி" என்பது நீண்ட பெயரைக் கொண்டதாக இருந்தபடியால் காலவட்டத்தில் "கொஸ்கொட குடி" என்றும், பின்னர் சம்மாந்துறையில் "கொஸ்கொட்டான் குடி" என்றும் கல்முனையில் "கொஸ்கொட்டைக் குடி" என்றும் நிந்தவூரில் "கொஸ்கொட்ட குடி" என்றும் அழைக்கப்படலாயிற்று.

ஆங்கிலம், வணிக மொழியாகவும் அரச கரும மொழியாகவும் இருந்தபடியால் இந்நாட்டு மக்களின் பாஷையை மொழி பெயர்த்து இனிமையாகவும், நளினமாகவும் முதலியார் அவர்கள் நீதிபதிக்கு எடுத்துக்கூறியதை அவதானித்த சம்மாந்துறை மக்கள் ஆங்கில மொழியை தேனாகவும் முதலியாரின் பதவியை முதன்மைபடுத்தியும் "ரஜபாஸாவ முதலி" எனும் சொல்லை வைத்து "தேன் முதலி குடி" என்று சம்மாந்துறை மக்களால் இக்குடி அழைக்கப்பட்டது. அன்றிலிருந்து "தேன் முதலி குடி" என்னும் பெயர் சம்மாந்துறையில் நிலைத்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

முதலியார் அவர்களின் மூத்த சகோதரிக்கு கரவாகில் திருமணம் செய்து வைக்கப்பட்டதன் காரணமாக அவவின் வழித்தோன்றல்களாக இன்று முன்னாள் அமைச்சர் AR.மன்சூர் அவர்களின் தாய் வழிக்குடும்பங்கள், MAL.காரியப்பர் சட்டத்தரணி அவர்களின் தாய் வழிக்குடும்பங்கள், பண்டித்தீவு வட்டானை தாய் வழிக்குடும்பங்கள், அன்பு முகையதீன் அவர்களின் தகப்பனின் வழிக்குடும்பங்களுமாக காணப்படுகின்றன. இன்னும் பல கிளைகளாக இவவின் வாரிசுகள் உண்டு என்பதும் அறியக்கிடக்கின்றது.

முதலியார் அவர்களின் 2வது சகோதரிக்கு கரவாகில் திருமணம் செய்து வைக்கப்பட்டாலும் தனது கணவனுடன் சம்மாந்துறையில் வந்து குடியேறி தமது வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள். கரவாகில் இருந்து சம்மாந்துறையில் குடியேறியதின் காரணத்தால்தான் "மஞ்சக் கரவாகர்" என்னும் நாமத்துடன் இங்கு தேன் முதலிக்குடி ஆரம்பமாகின்றது. இந்த அடிவேரில் இருந்துதான் ஹஸன்

மௌலவி, பெரிய விசாரை வ.வி, யாசீன் வட்டானை, அசுப்புளா வட்டானை, பெரிய வெ வட்டானை, ஐப்போடியார் ஹாஜியார் ஆகியோர்களது தாய் வழிக்குடும்பங்கள் கிளையாகப் பிரி சம்மாந்துறையில் பரந்து கிடக்கின்றன.

முதலியாருக்கும் அவரது மூன்றாவது தங்கைக்கும் நிந்தவூரில் திருமணம் நடைபெ வேட்சித்துரையால் கொடுக்கப்பட்ட காணி அவர்கள் இருவருக்கும் கொடுக்கப்படுகின்றது முதலி ஆணாக இருந்தபடியால் அவருடன் இக்குடி தடைப்பட அவரது சகோதரி மூலம் பிற பிள்ளைகளின் கோத்திரங்கள் கொஸ்கொட்ட குடியினர் என்று பரவலாக காணப்படுகின்றன இக்குடியில் இருந்து வந்த குடும்பங்கள்தான் ஜனாப் அகமது லெவ்வை உடையார் அவர்கள் பரம்பரையும், முன்னாள் அமைச்சர் ஜனாப் MM.முஸ்தபா அவர்களின் பரம்பரையும், ஜன பரம்பரையும், ஜனாப் மேசா ஹாஜியார் அவர்களின் பரம்பரையு தம்பிராசா கங்காணி அவர்களின் பரம்பரையும், ஜனாப் MH.அக்பர் ஹசன் அவர்களின் பரம்பரை சமூக சேவை பிரதிப்பணிப்பாளர் ஜனாப் சேர்ந்தவர்களுமாவர்.

இக்குடியினரின் சேவையை ஆராய்வோமாயின்: பல கோணங்களில் பரந்து கிடந்த இந் குடும்பங்களை ஒரு குடையின் கீழ் வைத்து நிலைப்படுத்த வேண்டுமென்று முன்னாள் பிர நம்பிக்கையாளரும், இக்குடியின் உப தலைவருமான டாக்டர் MM.மீராலெவ்வை (JP) அவர்கள் தலைமையின் கீழ் மாதா மாதம் குடிக் கூட்டங்கள் பல வருடங்களாக நடாத்தப்பட்டு, சந்தாக்களு சன்மானங்களும் சேர்த்து தமது குடியில் உள்ள வறிய குடும்பங்களுக்கும் ஊரில் உள்ள ஏழை குடும்பங்களுக்கும் கத்னா, திருமணங்கள் செய்துவைக்கப்பட்டதும் கடன் உதவிகள் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்க சேவையாகும்.

இந்த ஊருக்கு டாக்டர். MM.மீராலெவ்வை(JP) அவர்கள் குடியின் உப தலைவராக இருந் சேவை செய்ததைப் போன்று தற்போதய எமது குடி மரைக்காரன அல் ஹாஜ் AL.ஹபீப் முகம்ம அவர்களும் குடி மூலமாக ரூபா ஒரு இலட்சத்துக்கு மேல் பெரிய பள்ளிவாசல் கட்டிட நிதிக் அறவீடு செய்து கொடுத்தமையும், சம்மேளனத்தின் சார்பில் 72ம் இலக்க தூணுக்கு பங்களிப் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. இச்சம்மேளனத்தின் செயலாளராக கடமை புரிவது நம்பிக்கையாளராக 20 வருடங்களும் நம்பிக்கையாளர் சபை செயலாளராக 17 வருடங்களு கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கியதும் எங்கள் குடிக்கு வழங்கப்பட்ட அதியுயர் கௌரவம் எ கருதுகின்றோம்.

தகவல் வழங்கியோர்:

1. அல் ஹாஜ் ஹாபிஸ், அஷ்ஷேஹ் UL.சலாகுதீன்(B.A,Dip.in.Education) சம்மாந்துறை.
2. ULM.தாஹிர் கருவாட்டுக்கல் சம்மாந்துறை.
3. MMM.மன்சூர் மனேஜர் தேசிய சேமிப்பு வங்கி, அம்பாரை.
4. ALM.சலீம் இலங்கை வங்கி, சம்மாந்துறை.



## வெள்ளரசன் குடி

**பெரிய வெள்ளரசன் குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**

MA.மன்சூர் (Rtd GNS)
277,அம்பாறை றோட் சம்மாந்துறை-05.
TP.NO: 0672260843

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. MP.முஹம்மது இஸ்மாயில் (லோட்மேன்)
2. MP.முஹம்மது அலி (சீனித்தம்பி விதானை)
3. MY.ஹுசைன் (அதிபர்)
4. DR.ARM. அஸாப்
5. MA.முகையதீன் (WS நீ.பா.திணைக்களம்)

**சின்ன வெள்ளரசன் குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**

MM.நிஸாறுடீன் (BSc ஆசிரியர்),
அம்பாறை றோட், சம்மாந்துறை.
TP.NO: 0772094901

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. ஜனாப் M.அதம்லெப்பை (போடியார்)
2. ஜனாப் MZ.அகமதுலெப்பை ஆசிரியர்

வெள்ளரசன் குடியின் வரலாற்றை நோக்குவோமாயின் தலைமைத்துவம், குடும்பப் பிணக்கு காரணமாக வெள்ளரசன் குடி "பெரிய வெள்ளரசன" குடி என்றும், "சின்ன வெள்ளரசன்" குடி என்றும் பிரிவுபட்டிருக்கலாம். 1940ஆம் ஆண்டுகளுக்கு பின்பு இப்பிரிவினை ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் 1940.09.06 இல் நடைபெற்ற குடிமரைக்கார் கூட்டத்தில் இப்பிரிவினை பற்றி எதுவும் காணப்பட்டதாக ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

கண்டியை ஆட்சி செய்த எந்த அரசனுடைய காலத்தில் நடைபெற்றது என்பது ஆதாரபூர்வமாக கண்டுகொள்ள முடியவில்லை. என்றாலும் அராபிய, பாரசீக, ஆப்கானிஸ்தானிய பொதுவாக மத்திய கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரிகளுக்கும், இலங்கை அரசர்களுக்கும், குறிப்பாக கண்டிராச்சியத்துக்கும் நல்லுறவுகள் இருந்து வந்துள்ள வரலாறுகள் அதிகமதிகமுண்டு. அராபியருடைய சமயம், அதைத் தொடர்ந்தும் அவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வுகளும் அவர்களை உலகம் பூராகவும் சென்று வர வழிவகுத்ததை சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது.

இவர்களது கண்ணியம், விசுவாசம், உண்மையான நடத்தை, வீரம் என்பன அரசர்களையும் பிரதானிகளையும், சிங்கள மக்களையும் கவர்ந்ததில் வியப்பில்லை. கண்டி அரசனுடைய மகள் ஒருவருக்கு தீராத வியாதி. பார்க்காத வைத்தியமில்லை. செய்யாத சிகிச்சையுமில்லை. கைவிடப்பட்ட நிலையில் அரசனுடைய மகள் நோயாளியாக இருந்தார். அரசனும் குடும்பமும், பிரதானிகளும் கவலையில் மூழ்கியிருந்தனர். வியாபார நோக்கமாக கண்டி பகுதியில் சீவித்த அராபியர், தனக்குத் தெரிந்த வைத்தியமும் செய்து சிங்கள மக்களிடையே மதிப்பையும், மரியாதையும் பெற்றிருந்தனர். இம்முஸ்லிம் வியாபாரியின் வைத்திய திறமைகளை அறிந்த பிரதானிகள் அரசனுக்கு எத்திவைத்தனர்.

அரசனும், கைவிடப்பட்ட தனது நோயாளி மகள் எப்படியாவது குணமடையட்டும் என்ற அவாவில் இம்முஸ்லிமை வைத்தியஞ் செய்ய அனுமதித்தார். நோயாளி பெண் என்றவகையில் திரைமறைவில் இருந்து நோயாளியின் நோயைக் கண்டறிவதற்காக நூலை தன் கையில் பிடித்துக் கொண்டு, மறுமுனையை நோயாளியின் கையில் பிடிக்கச் செய்து நோயைக் கண்டுபிடித்தார். முதற்கட்டமாக தண்ணீர் ஓதிக்கொடுத்து குடிக்கச் செய்து அரசனின் மகளின் நோயைக் குணப்படுத்தினார்.

இதனால் இம்முஸ்லிம் வைத்தியரின் செல்வாக்கு அதிகரித்தது. சிங்கள மக்கள் வைத்தியஞ் செய்து பயன் பெற்றனர். சில நாட்களின் பின்பு இவ்வைத்தியர் தனது நாட்டிற்கு செல்ல விரும்பினார். இதையறிந்த அரசனும், பிரதானிகளும், மக்களும் கவலைப்பட்டனர். இவ்வைத்தியரை நாட்டை விட்டுச் செல்லாதிருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கான பொறுப்பு அரசனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இவ்வைத்தியர் இளம் வயதினராக இருந்ததாலும், அரசனுக்கும் தேவைப்பட்டவராக காணப்பட்டதாலும் இவருக்கு இங்கேயே திருமணம் முடித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடொன்றை அரசன் செய்தார். கண்டிப் பெரஹராவின் போது வைத்தியருக்குத் தேவையான பெண்ணை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு வைத்தியரிடமே பொறுப்பாக்கப்பட்டது. அதன் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட பெண்ணை அரசன் முஸ்லிம் வைத்தியருக்கு திருமணம் முடித்துக்

கொடுத்தார். அத்துடன் இவ்வைத்தியரின் உதவியாளர்களுக்கும் சிங்கள பெண்கள் திருமண முடித்துக் கொடுக்கப்பட்டனர்.

இவ்வைத்தியரினதும் உதவியாளர்களினதும் மனைவிமார்கள் தமது கணவன்மார்களின் மதத்தை பின்பற்றி வாழலாயினர். அரசனும் இவர்களுக்கு வெல்லசப் பகுதியில் நிலம் வழங் குடியேற்றியதாகவும் பரம்பரை பரம்பரையாக பேசப்பட்டு வரும் வரலாற்று ஆவணமாகும். கண்டிக்கு சம்மாந்துறைக்குமான பாதை வெல்லச ஊடாக செல்வதால் முஸ்லிம் வைத்தியரின் குடும்பங்க சம்மாந்துறைக்கும், இறக்காமத்திற்கும் குடி பெயர்ந்திருக்கலாம்.

பொத்துவில், சாய்ந்தமருது பிரதேசங்களில் இக்குடியின் பரம்பரையினர் காணப்படுகின்றன இறக்காமத்தில் தான் வெல்லசயிலிருந்து குடியேறியோர் அதிகமாக இருந்திட்ட போதிலும் அங் "வெள்ளரசன் குடி" என்ற பெயரில் குடி இல்லை. என்றாலும் "வெல்லசக" குடி என்ற இறக்காமத்தில் காணப்படுகின்றது. வெள்ளரசன் குடி தான் வெல்லசக் குடியாக அங்கு பெ பெற்றிருக்கலாம்.

அரசனதும், பிரதானிகளினதும் குடும்பங்களில் இருந்து இவ்வைத்தியருக்கு உதவியாளர்களுக்கும் பெண்கள் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டபடியால் வெள்ளரசன் என பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். தென்கிழக்குப் பிராந்தியத்தில் இவர்களது குடியேற்றம் நிகழ் படியால், இங்கு குடிமுறை பாரம்பரியம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தமையால், அம்முறையை பின்பற்றி இவர்கள் தங்களை "வெள்ளரசன் குடி"யினர் என பெருமையாக சொல்லிக் கொண்டனர்.

1980களில் கல்வி அமைச்சரான கௌரவ நிசங்க விஜயரெத்ன அவர்கள் சம்மாந்துறைக் விஜயம் மேற்கொண்டார். அல் ஹாஜ் MA.அப்துல் மஜீட் அமைச்சர் அவர்கள் அமைச்ச அவர்களை வரவழைத்திருந்தார். அக்கால கட்டத்தில் பெரிய வெள்ளரசன் குடியின் குடிமரைக்கார இருந்த அல் ஹாஜ் MA.முகம்மதலி (சீனித்தம்பி விதானை) அவர்கள் கல்வி அமைச்சருக் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார். அப்போது நிசங்க விஜயரெத்ன அவர்கள் தானும் வெள்ளரச குடியைச் சேர்ந்தவன் என்பதை வெளிப்படுத்தி உறவாடி மகிழ்ந்தார்.

தமிழ் மக்கள் உறவினால் மாத்திரம் மட்டக்களப்பில் குடி வழிமுறை நடைமுறையி இருந்துவந்துள்ளது என்பதற்கு மாற்றமாக சிங்கள மக்களின் உறவினாலும் குடி வழிமுறை தோற்ற பெற்ற வரலாறுகளையும் காண்கின்றோம். இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் தாய்மார்களு ஆதிக்குடிகளே என்பதை மறுக்க முடியாது. வந்தான் வரத்தான் என்றால் இன்றைய பெரும்பான்மை சமூகத்தையும் அதற்கடுத்த சமூகத்தையும் என்னவென்று அழைப்பது?

பெரிய வெள்ளரசன் குடியின மரைக்காராகவும், சம்மேளனத்தின. உபதலைவராகவும் சிறி காலம் இருந்த அல் ஹாஜ் MA.முஹம்மதலி அவர்கள் 1978இல் நம்பிக்கையகளர் சபை, வக் சபை, பொதுமக்கள் ஆகியோர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்த்து வைப்பதி "ஜிஹாத்" செய்வதற்கும் தயாராக முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல் வழங்கியோர்:

- பெரிய வெள்ளரசன் குடி
  1. MM.றௌபிக் (நுலகப் பொறுப்பாளர், தொ.நு.கல்லூரி சம்மாந்துறை)
  2. ARM.அஸாட் (GNS, சம்மாந்துறை)
- சின்ன வெள்ளரசன் குடி
  1. MM.றிபாயுடீன் (நுலகப் பொறுப்பாளர், தெ.கி.பல்கலைக்கழகம்)
  2. Dr. MM.சாக்கீர் பஸார் வீதி, சம்மாந்துறை-08.



## சங்கதி குடி

இக்குடியின் தற்போதய குடிமரைக்கார்
வித்துவதீபம் அல் ஹாஜ் சுலையுமாலெவ்வை ஆதம் பாவா (JP)
ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்
63 மத்திய வீதி, சம்மந்துறை-07.
TP.NO: 0672260135,0718096758.

இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:

1. ஜனாப் K.சின்னலெப்பை வ.வி (தெறிப்பர் வட்டவிதானை) (1969 க்கு முன்)
2. ஜனாப் MI.அலியார் லெப்பை மனேஜர் (அச்சி மனேஜர்) (1969-1975)
3. அல் ஹாஜ் SL.அகமதுலெப்பை போடியார் (1975-1977)

இக்குடிக்கு "சங்கை அதிகுடி" என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. "சங்கதி" என்ற தூய தமிழ்ச் சொல்லுக்கு வரலாறு, தொடர்பு, செய்தி என்பன போன்ற அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. எனினும் "சங்கதி" என்று சொல்லும் போது உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை. என அர்த்தம் கொள்ளலாம். "சங்கை" என்ற சொல்லுக்கு நாட்டுவழக்கில் "உரோசம்" என்ற அர்த்தமும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளதுளமையும் தென்படுகின்றது.

பழைய அரசர்கள் வர்த்தக கம்பனிகள் அயல் நாடுகளுக்கு தூதுவர்களை, ஒற்றர்களை அனுப்பி அயல் நாடுகளின் செய்திகளை, நிலவரங்களை அறிந்து நாடுகளை விஸ்தரித்தல், வியாபாரத்தைப் பெருக்குதல், மதங்களைப் பரப்புதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டமை. சரித்திரம் கூறும் உண்மையாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமது நாட்டுக்கு அனுப்பப்பட்ட இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம் செய்தி சேகரிப்பவர்களைத் தற்போதைய வழக்கில் "ஊடகவியராளர்கள்" என அறிமுகப்படுத்தப்பட்டவர்களைக் கொண்டு தோற்றம் பெற்ற ஒரு குடியாக இந்த சங்கதி குடி இருக்கலாம் எனக்கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில் அன்றைய நாட்டு வழக்கில் செய்திக்கு "சங்கதி" என வழங்கியதும் நாட்டார் பாடல்களில் "சங்கதி சேத்தாய்" எனும் அடிகள் தென்படுவதும் கண்கூடு.

பிற்காலத்தில் இக்குடியில் திகழ்ந்த பெரியார்கள், குடிமரைக்கார்மார் போன்றவர்களும் குடியிலுள்ளவர்களும் சங்கையில் (உரோசம்) நீதியில், நேர்மையில், பொதுநலன்களில் மோலோங்கி நின்றமை தென்படுதிறது. உதாரணமாக குடியின் மரைக்காராக இருந்த

1. ஜனாப் K.சின்னலெவ்வை வட்ட விதானையாக இருந்த போது தனது வயல்காரன் வேலியால் பன்றி புகுந்ததாக வட்டையிலுள்ளவர்கள் கூறிய உடனே அந்த இடத்திற்கு சென்று அந்த இடத்திலேயே தனது வயற்காரன் சொந்தக்காரன் என்றும் பாராது பிரம்படி கொடுத்து தண்டனை வழங்கியது.
2. ஒரு பெருநாளில் இக்குடி மகனான ஜனாப் I.சுலைமாலெப்பை என்பவர் போட்டிக்கு வண்டில் ஓட்டி முந்திச் சென்ற போது அனியாயனமாக தன்னை அடித்தவனை ஒரு சண்டியனாக இருந்தும், தன்னை அடித்தவனை தேடிச்சென்று அதே அளவு தண்டனை வழங்கி மார்க்க நடைமுறைக்கு அமைவாகவும், பேணுதலாகவும் நடந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களையும் மேற்கூறிய செயல்களையும் நோக்கும் போது இக்குடியிலுள்ளவர்கள் சங்கையில் அதிகூடியவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள் என்பதும், இக்குடிக்குச் சங்கையில் அதிகூடிய குடியென இருந்தது; மருவி "சங்கதி" குடி என வந்துள்ளது, என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

*இன்னும் இக்குடியைப்பற்றி ஆராய்கையில்* : இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்கள் உண்மைத்தன்மையான செய்திகளைக்கூறும் முஸ்லிங்களை தமது அரச சபையில் மிக விசுவாசமாக வைத்திருந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். அதனால் அம் மன்னர்கள் இம் முஸ்லிம்களை அவர்கள் நாட்டுக்குச் செல்லவிடாது இங்குள்ள பெண்களை மணம்முடித்து நிரந்தரமாக வாழவழிவகுத்தனர் என்பதும் இக்குடி தமிழர் மரபிலிருந்து தோற்றம் பெற்றதல்ல என்பதும் புலனாகின்றது. ஆனால் கிழக்கில், அதிலும் தென்கிழக்கில் அன்றய காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிலவி வந்த தாய்வழி குடி முறையை இவர்களும் பின்பற்றி வாழ தொடங்கியதால் சங்கதி குடி எமது பிரதேசத்திலும் நிலைபெறலாயிற்று. தற்போது நிந்தவூர், கல்முனை போன்ற இடங்களிலும் பரவிக்காணப்படுகின்றது. குறிப்பாக இன்று சம்மாந்துறையில் சுமார் 336 குடும்பங்களிருந்து ஏறத்தாள 1000 க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.

1978 ஆம் ஆண்டில் இருந்து ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் அல் ஹாஜ் SL.ஆதம்பாவா(JP) அவர்கள் இக்குடியின் மரைக்காரராக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இற்றை வரைக்கும்

கடமையாற்றிக் கொண்டு வருகின்றார். இவரின் காலத்திலேதான் சிறந்ததொரு நிருவாக கட்டமைப்புடன் குடியினுடைய கௌரவத்தை மேலோங்கச் செய்கின்ற நடவடிக்கைகளு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவரின் மூலமாக அமைக்கப்பட்டு செயற்படுகின்ற நிருவாக குழுவின் மூலம் பள்ளிவாசல்கள் அமைத்தல், மற்றும் சமூக தேவைகள் போன்றவற்றுக் உதவுமுகமாக தனது குடியிலுள்ள வசதிபடைத்தவர்களின் உதவியுடன் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பணத்தைச் சேகரித்து வட்டியில்லா வங்கியில் (SA1054)ம் இலக்க கணக்கில் இட்டு பாதுகாக்கின்றனர். இதன் முதற் பணியாக பெரிய பள்ளிவாசல் புணருத்தாரனத்துக்கு 82ம் இலக் தூணிண் பெறுமதியான ரூபா 63000 வழங்கப்பட்டுள்ளதும், குடிமரைக்காரர் சம்மேளனத்தின் சார்பி வழங்கப்பட்ட 72ம் இலக்கத் தூணுக்கான தொகையிலும் பங்களிப்புச் செய்துள்ளதும், அல் ஹிலா ஜு*ம்மாப்பள்ளிவாசல் புணரமைப்புக்கு ரூபா 10000.00 வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. இந் நிர்வா கட்டமைப்பே குடியின் சகல நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு செயலாற்றி வருவது சிறப்பம்சமாகும்

இக்குடியின் மரைக்காரராக இருக்கும் அல் ஹாஜ் SL.ஆதம்பாவா(JP) அவர்கள் 1978 இ நம்பிக்கையாளார் சபை வக்பு சபை பொதுமக்கள் ஆகியோருக்கிடையில் எற்பட்ட பிணக்கை தீர்ப்பதில் நீதிமன்றம் வரை சென்றவர் என்பதும், "ஜிஹாத்" செய்வதற்கும் துணிந்து முன்வந்தவ என்பதும் குறிப்பிடத்தக்கது. இதை உணர்ந்த பொதுமக்கள் இவரை ஏக காலத்தில் நம்பிக்கையா சபை செயளாலர், பொருளாளாரக தெரிவு செய்ததும் இவரின் செயற்பாட்டின் காரணமா சம்மாந்துறை பள்ளிவாசல்கள் எல்லாம் பெரிய பள்ளிவாசல் பதிவின் கீழ் கொண்டு வரப்பட்டது காரியாலயம் அமைக்கப்பட்டதும், ஹிஜ்றா ஜு*ம்மா பள்ளிவாசல் தற்போதுள்ள இடத்தி கட்டத்தீர்மானிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதும், "மஜ்லிஸ் அஸ்ஷு*றா" தோற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இக்குடியின் தலைவர் அல் ஹாஜ் SL.ஆதம்பாவா(JP) அவர்களுக்கு சம்மாந்துறையிலுள் அத்தனை குடிகளினுடைய சம்மேளனத்திற்கு தலைமைதாங்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது இக்குடியின் சங்கதியை இன்னும் வெளியுலகத்திற்கு பறைசாற்றுவதாகவும், இக்குடியி தலைமைத்துவத்திற்கு கிடைத்த மகுடமாகவும் கருதுகின்றோம்.

**தகவல் வழங்கியோர்:**

தற்போது செயற்படுகின்ற நிர்வாகக் குழுவினர்

1. AM.மன்சூர் (DS), லோட் மேன் வளவு சம்மாந்துறை-08.
2. அல் ஹாஜ் MTM.நசீர் (Tr), பஸார் 9ம் வீதி, சம்மாந்துறை-04.
3. ALM.இஸ்மாயில் (GNS), ஹாஜியார் லேன் சம்மாந்துறை-09.
4. Dr ULM.தௌபிக், பாடசாலை வீதி, சம்மாந்துறை-02.
5. MS.யாஸ்தீன், ஹாஜியார் லேன் சம்மாந்துறை-07.
6. அல் ஹாஜ் P.அபூபக்கர், அலிவன்னியா ரோட் சம்மாந்துறை.



## இராசம்புள்ள குடி

இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்

அல் ஹாஜ் கோஸ்முஹம்மது முஹம்மது முஸ்தபா (JP)

ஓய்வு பெற்ற அதிபர், நம்பிக்கையாளர் சபை பொதுச் செயலாளர்.

215, மூங்கிலடி வீதி, சம்மாந்துறை 04.

TP.NO: 0672261212

இக்குடியின் குடிமரைக்காரராக இருந்து வந்துள்ளவர்களின் விபரங்கள்

1. ஜனாப் சின்னப்புள்ளப் போடியார்
2. ஜனாப் சுலைமாலெப்பை அல்லிலெப்பை (அல்லிலெப்பை போடியார்)
3. ஜனாப் M.கலந்தர் லெவ்வை (புரோக்கர்)
4. அல் ஹாஜ் M L.மீராமுகையதீன் (வைத்தியர்)

சிங்கள அரசனுடைய தொடர்பினால் ஏற்பட்ட குடிகளில் ஒன்றாக கணிப்பிடக்கூடியது. தமிழ் முஸ்லிம் மக்களது உறவின் அத்தாட்சியான குடிகளைப் போன்று "இராசம்புள்ள குடி"யும் சிங்கள வம்சத்தினதும் முஸ்லிம்களினதும் அன்னியோன்னிய உறவின் எடுத்துக்காட்டாக கொள்ள முடியும்.

"புள்ள" என்பது மரியாதைக்குரிய வார்த்தையாகும். "பிள்ளை" என்பது மருவிவந்ததாகவும் இருக்கலாம். சுல்தான் புள்ள, உதுமான் புள்ள, செட்டி புள்ள போன்ற குடிகளின் இறுதியில் மரியாதை வெளிப்படுவதைக் காண்கின்றோம். சுல்தான் குடி, உதுமான் குடி, செட்டி குடி என்று கூறுவதை விடவும் "புள்ள" என்ற ஈற்றடியை சேர்ப்பதிலுள்ள அந்தஸ்து உயர்ந்து நிற்பதை அறியலாம்.

இக்குடியின் மரைக்காராக இருந்த மர்ஹு*ம் அல் ஹாஜ் ML.மீராமுஹைடின் வைத்தியர் 1985 ஆம் காலகட்டத்தில் "இராசம்புள்ள குடி" பற்றி கூறிய விடயத்தை இவ்விடத்தில் ஞாபகப்படுத்துகின்றோம். புவனேந்திர மன்னனுடைய அரச சபையில் முஸ்லிம் பெரியார் ஒருவரும் இருந்தார். அரசனுக்கு ஆலோசனை வழங்குவதில், வழிகாட்டுவதில், எதிர்வுகூறுவதில் விற்பன்னராக திகழ்ந்தார். அரசனுக்கும் இவர் மீது மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது. முஸ்லிம் நாடுகளுடனான தொடர்புகளுக்கும் இம்முஸ்லிம் அறிஞர் பக்கபலமாக இருந்து வந்துள்ளார். ஒரு நாள் அரசன் அரச உலாவரும் போது அழகு சுந்தரியான ஒரு பெண்ணைக் கண்டு விட்டார். அப்பெண்ணும், அவரது தோழிமார்களும் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது இச்சம்பவம் நடைபெற்றது.

அரசன் தனது பிரதாணிகள் மூலமாக இப்பெண்ணைப்பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். அப்பெண்ணை திருமணம் முடிக்கவும் விருப்பம் கொண்டார். ஆனால் தனது மரியாதைக்குரியவரின் மகளை, அதுவும் வேறு மதப் பெண்ணை முடிப்பதில் உள்ள இடர்பாட்டையிட்டு குழப்பம் அடைந்தார். அரசனது சங்கடத்தை புரிந்த கொண்ட பிரதாணிகள் இவ்விடயமாக முஸ்லிம் பெரியாரிடம் கலந்தாலோசித்தார்கள். அவர் இவ்விடயத்தை தனது மகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

பாத்தும்மா என்ற அப்பெண், அரசனுடைய எண்ணத்துக்கு மாற்றமாக நடந்து கொண்டால் தனக்கும் தனது குடும்பத்துக்கும் தீங்கு நிகழலாம் என்ற அச்சத்தினால் நிபந்தனை ஒன்றை முன்வைத்து அரசனைத் திருமணம் முடிக்க உடன்பட்டார். அந்த நிபந்தனையாவது, தனக்கும் அரசனுக்கும் பிறக்கும் பிள்ளைகள் முஸ்லிமாக வளரவேண்டுமென்பதே.

இந்த நிபந்தனையின் பெயரில் நடைபெற்ற திருமணத்தின் மூலம் பிறந்த முதல் பிள்ளையின் பெயர் "செய்னுலாப்தீன்" என்பதாகும். இப்பிள்ளை பேருவளையில் மார்க்க கல்வியைக் கற்று முஸ்லிமாகவே வாழ்ந்து வரலாயிற்று. இப்பிள்ளையின் திருமணபந்தத்தின் மூலமான சந்ததியினரே "இராசபிள்ளையின் குடி" என்றாகிட்டு. இலங்கையின் மேற்கு, தெற்கு முஸ்லிம்கள் போத்துக்கீசருடைய ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பின்றி வாழவேண்டிய சூழ்நிலையினால் கண்டி அரசனுடைய உதவியை நாடிய போது அவ்வரசன் நாலாயிரம் முஸ்லிம் குடும்பங்களை மட்டக்களப்புக்கு அனுப்பிவைத்தான். அவ்வாறு வந்தவர்கள் தான் செய்னுலாப்தீனுடைய சந்ததியினராவர். மட்டக்களப்பு பிரதேசத்தில் அன்று தாய் வழி முறையிலான குடி வழிமுறை பின்பற்றப்பட்ட படியால் இவ்வாறு குடியேறியவர்களும் அவ்வாறே தாய்வழிமுறையில் தமக்கு ஒரு குடியை ஏற்படுத்திக் கொண்டனர். இராசாம்புள்ள குடி சம்மாந்துறையில் மாத்திரமன்றி, சாய்ந்தமருது, இறக்காமம், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர் போன்ற தென்கிழக்கு பிரதேசத்திலும் பரவலாக அழைக்கப்பட்டு வருகின்றன. இக்குடியை சேர்ந்த மூதாட்டி ஒருவர் இக்குடியின் மேன்மை பற்றி உயர்த்திக் கூறினார். அவர் கூறிய வார்த்தையை வேறு குடியை சேர்ந்த இன்னும் பல

மூதாட்டிகளும் ஒப்புவித்தனர். "இராசாம்புள்ள குடியாள் எப்படிக் கிடந்தாலும் அவள் பெறும் பிள்ள அரசுபதி நங்கூரம்"

அரசபரம்பரையை சேர்ந்தவர்கள் என்று எடுத்துக்காட்டாகவே இவ்வாறு புகழப்படுகின்றது.

இக்குடியின் மரைக்காராக இருந்த சுலைமாலெவ்வை அல்லிலெப்பை போடியார் அவர்க 1940ஆம் ஆண்டளவில் குடிமரைக்கார் சம்மேளனத்தின் செயளாலராக கடைமையாற்றிய அவரினால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த கூட்ட குறிப்புகள் மூலமும் மற்றும் தஸ்தாவேஜிகள் (47ஆ இலக்க பள்ளிவாசல் வழக்கு சம்பந்தமான) மூலமும் அறியவருகிறது. இவருடைய இச்சேவ தற்போதைய சமூகத்திற்கு குடிகள், பள்ளிவாசல், நிருவாகம் போன்றவைகளை அறிய முக்கி சாதனமாக இருப்பது குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்க விடயமுமாகும்.

இக்குடியின் மரைக்காராக இருந்த அல் ஹாஜ் ML.மீராமுகையதீன் (வைத்தியர்) அவர்க குடியின் முன்னேற்றத்தில் அதிக அக்கறையுள்ளவராகத் திகழ்ந்தது மட்டுமல்லாமல் "தப்லீகு இஸ்லாம்" அரபுக் கலாசாலையின் தோற்றத்திலும் அரும்பாடுபட்டு உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குடியின் தற்போதய மரைக்காராக கடமையாற்றும் அல் ஹாஜ் KM.முஸ்தபா(JP) அவர்க பலகாலமாக சம்மேளனத்தின் செயலாளராக கடமையாற்றி "மஜ்லிஸ் அஷ்ஷுரா" அமைப்பி குடிமரைக்கார்களின் உறுப்புரிமையை நிலைநாட்டுவதில் அரும்பாடுபட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ கௌரவிக்கும் முகமாக இவரை "மஜ்லிஸ் அஷ்ஷுரா" செயலாளராக இருமுறை தெரிவுசெய்தமையும் சம்மேளனத்தினால் 2ம் பருவத்திற்கான நம்பிக்கையாளராக தெரி செய்துள்ளமையும் நம்பிக்கையாளர் சபையும் இவரின் திறமையை அறிந்து பிரதம செயலாளரா நியமித்து சிறந்த சேவையைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதும் பாரட்டுக்குரியதுமாகும்.

**தகவல் வழங்கியோர்:**

1. ஜனாப் KM.பஷீர் (NPC) ஹாஜியார் லேன், சம்மாந்துறை-09.
2. ஜனாப் K.முஹம்மட் அலி (Claerk) மூங்கிலடி வீதி, சம்மாந்துறை.



## சுல்தான் குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**
அல் ஹாஜ் அப்துல் காதர் முகம்மது சம்சுதீன்.
ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், சது/மக்கள் வங்கி.
56/1, பிலாவடி லேன், சம்மாந்துறை-04.
TP.NO: 0672260747, 0718218424

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. மீ.வ.வி முகம்மதிஸ்மாயில் லெவ்வை.
2. முகையதீன் பாவா சீனிமுகம்மது போடி
3. அகம்ட்லெவ்வை (சின்னமரைக்கார் பரிகாரி).
4. பக்கீர் முகையதீன் பாவா (பக்கீர் முகையதீன் போடி)
5. MI. முகம்மது இஸ்மாயில் (குடாவட்டை வ.வி).
6. அல் ஹாஜ் MAM.அலியார் மௌலவி (கண்ணாடி ஆலிம்).

"சுல்தான் புள்ள குடி"யென்றும் அழைப்பர். அக்கரைப்பற்றில் "சுல்தான் குட்டி குடி" என அழைக்கப்படுகின்றது. கல்முனைக்குடி, மருதமுனையிலும் "சுல்தான் குடி" என அழைப்பதுண்டு. இக்குடியின் வரலாற்றைத் தேடித்திரிந்த போது, ஒரு ஊரின் இடம்பெயர்வையும் காணக்கூடியதான அதிசயத்தையும், ஆச்சரியத்தையும் அறிகின்றோம். இரண்டு சமூகங்கள், இரண்டு சமயத்தவர்கள் புரிந்துணர்வோடும், ஒற்றுமையோடும் தத்தமது ஊரை மற்றவர்வருக்கு விட்டுக்கொடுத்து குடிபெயர்ந்து வாழ்ந்து வந்த வரலாற்றைக் நோக்கும்போது அன்றைய மக்களின் பரந்து விரிந்த மனப்பாங்கை என்னவென்று சொல்வது?

மருதமுனை மஜீத் என்ற ஓய்வுபெற்ற கல்வி பணிப்பாளரின் "எனது கிராமத்தைத் தேடுகிறேன்" என்ற புத்தகத்தில் 23ம் பக்கத்தில் "கிராம நகர்ச்சி" என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளமையை அறிகின்றோம் மருதமுனை மஜீத் அவர்களின் கருத்தை அப்படியே முன்வைக்கின்றோம். "அக்காலத்தில் மருதமுனையில் சிறிய அளவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். கண்டி மன்னன் சேனரதன் தனக்கு உதவியாக இருந்த முஸ்லிம்களுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு நாலாயிரம் முஸ்லிம்களை தனது ஆதிபத்தியத்தில் அடங்கிய கிழக்கிற்கு அனுப்பி குடியமர்த்தினான்.

துறைநீலாவனையில் முஸ்லிம்கள் நெய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். நன்நீர் மீன்பிடியில் நாளாந்தம் ஈடுபடும் தமிழ் மக்கள் மருதமுனையில் வசித்தனர். தம் தொழிலுக்காக அவர்கள் துறைநீலாவனைக்கு வந்து சென்றனர்.நெய்யும் தொழிலுக்கு பாஓட, பசைபோட, குழிதோண்டி தறிபோட மருதமுனை வாய்ப்பான மணல் தரையாக இருந்தது. எனவே, தமிழரும், முஸ்லிம்களும் தத்தம் தொழில் நிமித்தம் ஒத்து மாறிக் கொண்டனர் என்பது வாய்வழிவந்த வரலாற்றுக் கதையாகும்.

எனவே, இன்று மருதமுனையின் முன்னோர் நீலாவனையிலும், நீலாவனையின் முன்னோர் மருதமுனையிலும் சீவித்து தொழில் புரிந்து வந்துள்ள உண்மையை அறிகின்றோம். சுல்தான் குடிக்கும் மருதமுனை கிராம நகர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? என்பதை ஆராய்வோய்மாயின், துறைநீலாவனையில் முஸ்லிம்கள் வசித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் முஸ்லிம் வியாபாரிகள் இந்தியாவின் கிழக்கு துறைமுகங்களில் இருந்து இலங்கையின் கிழக்கு துறைமுகங்களுக்கு வருவது வழக்கம்.

தரை மார்க்கமான பிரயாணத்தின் மூலம் அராபிய வர்த்தகர்கள், இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் இலங்கையை நோக்கிவருவதுண்டு. அப்படி வரும்போது கப்பல் பிரயாணத்திற்கு வழிகாட்டியாகவும், பாதுகாப்புக்குமாக இந்தியர்களையும் அழைத்து வருவது வழக்கம். அதன்பிரகாரம் சரக்குக் கப்பல்கள் இந்தியாவின் கொச்சிச் துறைமுகத்திலிருந்து இலங்கையின் கிழக்கு துறைமுகத்தின் மட்டக்களப்பு வாவியூடாக சம்மாந்துறை துறைமுகத்தை நோக்கி பிரயாணமாகியது. அக்கப்பல்களில் ஒன்று திசைமாறி துறைநீலாவனை துறையில் தரைதட்டியது. அக்காலத்தில் துறைநீலாவனையில் முஸ்லிம்கள் வசித்து வந்தார்கள்.

இவ்வாறு தரைதட்டிய கப்பலில் கொச்சித் துறைமுகத்திலிருந்து வந்திருந்த "சுல்தான் ஹாஷிம்" என்னும் கப்பல் வழிகாட்டியும் இருந்தார். சில நாட்கள் அக்கப்பல் துறைநீலாவனையில் தரித்திருந்த போது சுல்தான் ஹாஷிம் என்பவரும் துறைநீலாவனையில் தங்கிவிட்டார். அத்துடன் அங்கேயே திருமணம்முடித்து குடிபதியுமானார். சுல்தான் ஹாஷிம் அப்போது முஸ்லிம்களிடமிருந்த குடிவழிமுறையிலான, ஒரு குடியின் பெண்ணை திருமணம் முடித்திருந்தாலும் அப்பெண்ணின்

வம்சாவழி அவரின் குடியின் பெயரில் வழங்கப்படவில்லை. சுல்தான் ஹாஷிம் வேறு நாட்டவரா வித்தியாசமானவராக, தொழில் முறையிலும் மாறுபட்டவராக இருந்தபடியால், அவரது பரம்ப அவரது பெயர்கொண்டு அழைக்கப்படலாயிற்று. காலவோட்டத்தில் மருதமனையை அண் ஊர்களான சம்மாந்துறை, கல்முனைக்குடி போன்ற இடங்களில் இக்குடியின் வளர் காணப்படுகிறது.

இக் குடியின் மரைக்கார்களாக இருந்த பக்கீர் முஹைதீன் போடி அல் ஹாஜ் MAM. ஆலிய மௌலவி போன்றவர்கள் குடிமரைக்கார்களாக மட்டுமல்லாமல் நம்பிக்கையாளராகவும் ப வருடங்கள் சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது.

இக்குடியின் தற்போதய மரைக்காரான அல் ஹாஜ் அப்துல் காதர் முகம்மது சம்சுதீன் அவர்க குடிமரைக்கார் சம்மேளனத்தின் தனாதிகாரியாக சிறிது காலத்திற்கு முன்தான் பதவி ஏற்ற போது குடிமரைக்கார் சம்மேளனத்தின் பெயரில் பெரிய பள்ளிவாசலில் இயங்கும் வட்டியில்லா வங்கியி கணக்கொன்றை (இல SA10548) திறந்ததுமல்லாமல் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தி வருவ குறிப்பிடத்தக்கது. சம்மேளனத்தால் பெரிய பள்ளிவாசல் புனரமைப்புக்காக 72ஆம் இலக் தூணுக்கான பணத்தை சேகரித்து வழங்குவதிலும் அரும்பாடுபட்டமை குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக் உரியதுமாகும்.

**தகவல் வழங்கியோர் :**

1. MAM.றசீட் 209,கல்/1ம் குறுக்குத்தெரு, கருவாட்டுக்கல்-02.
2. MM.ஜுனைட் நீர்பகுப்பாளர் 147, புளோக் J மேற்கு, விளினியடி-03



## கோசப்பா குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**

அல் ஹாஜ் சாகுல்ஹமீது அப்துற்றாஸீக்(JP) ஓய்வுபெற்ற அதிபர்.
202, பீர்போடியார் வீதி, சம்மாந்துறை-09
TP.NO: 0672260577,0776548557

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. தம்பிப்போடி கோஸ்முகம்மது போடி.
2. உதுமான்கண்டு போடி அப்துல் லத்தீப் (தாவளம் முகாந்திரத்தின் பேரன்).
3. அகமதுலெவ்வைப் போடி முகம்மதுக் காசிம் (யாசின் போடியார்).
4. ஹபீப் முகம்மதுப் போடி முகம்மதிஸ்மாயில் போடி (ஜப்போடியார் மகன்).
5. அல்லிலெவ்வைப் போடி யூசுப்லெவ்வை மனேஜர், வ.வி.
6. அல்லிலெவ்வைப் போடி ஆதம்லெவ்வை (சைசின் வ.வி).
7. அல் ஹாஜ் MI.முகம்மதிப்றாகீம் வ.வி.(கண்ணாடி மரைக்கார் மகன்).
8. அல் ஹாஜ் KL.அப்துல் றசூல் ஓய்வுபெற்ற அதிபர்.
9. அல் ஹாஜ் KL.அப்துல் றகீம் மனேஜர் (கலந்தர்லெவ்வை வாத்தியார் மகன்)

இடத்தினதும், தொழில், பிரபல்யமானவர்களினதும் பெயர்களை கொண்டும் குடிகளினது பெயர்கள் வழக்கத்திலுள்ளன. ஆனால் கோசப்பா குடியினது பெயர் வேறொரு விதத்தில் வித்தியாசமானது எனலாம். தாய்வழிப் பாரம்பரியத்தில் குடிமுறையில் பின்பற்றப்பட்டு வந்ததாலும் பிரபல்யமான மனிதர்களின் பெயர்களைக் கொண்டு புதுப்புதுக் குடிகள் தோன்றிய வரலாற்றைக் கண்டோம். "கோசப்பா" என்பவர் பெரிய பள்ளியில் நல்லடக்கம் செய்யப்பட்ட ஒரு நல்லடியார்-அவுலியா. அப்புனிதரின் பெயரில் ஒரு குடி எப்படித் தோன்றியது? என்பதை ஆராய்வோமாயின், 15ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சம்மாந்துறையின் வரலாற்றில் மாற்றங்கள் நிகழ்வதற்கான அடியார்களின் வருகை இடம்பெறலாயிற்று. அன்று சம்மாந்துறையில் "முகைதீன் பள்ளிவாசல்" (சின்னப்பள்ளி) என்று ஒரேயொரு பள்ளி மாத்திரமே இருந்துள்ளது. இன்னுமொரு பள்ளியின் தோற்றத்திற்கும், அப்பள்ளி "கோசப்பா பள்ளி" என்றும், "பெரிய பள்ளி" என்றும் அழைக்கப்படுவதற்கும், முஸ்லிம்களின் பரம்பலுக்கும் வித்திட்டது எனலாம்.

சம்மாந்துறை ஒரு துறைமுகமாகவும், கப்பல் பழுதுபார்க்கும் துறைமுகமாகவும், பொருட்களை ஏற்றி இறக்குமதி செய்யும் துறைமுகமாகவும், கண்டிராச்சியத்தின் துறைமுகமாகவும் விளங்கியமையை வரலாற்றில் அறிகின்றோம். அந்த வகையில் இந்தியாவின் கிழக்குத் துறைமுகத்திலிருந்து இலங்கையின் கிழக்குக்கரையை வந்தடைந்த சரக்கு கப்பலொன்று, வள்ளங்கள் மூலம் மட்டகளப்பு வாவியினூடாக சம்மாந்துறையை வந்தடைந்தது.

1475ஆம் ஆண்டளவிலான கால கட்டத்தில் சம்மாந்துறையை வந்தடைந்த வியாபாரப் பொருட்களுடன் கோசப்பா என்ற நல்லடியாரும், அவருடன் கோஸ்முகைதீன் காரியப்பர் என்ற சீடரும் ஆறுவயது மதிக்கத்தக்க பெண்குழந்தை ஒன்றும் காணப்பட்டனர். வியாபாரப் பொருட்கள் வர்த்தக நிலையத்தை வந்தடைய, இம்மூவரும் இன்றைய பெரிய பள்ளியில் காணப்பட்ட மரத்ததடியில் தங்கினர். சிறுபற்றைகளாகவும், காடாகவும் இவ்விடம் காட்சியளித்தது. இவர்கள் இங்கு தங்கியிருக்கும் விடயம் வர்த்தக நிலையத்தில் பொசியத் தொடங்கின. மக்கள் கூட்டம் கூட்டமாக இவர்களை சந்திப்பதற்காக வருகை தந்துகொண்டிருந்தனர். காடாகவும், மக்கள் வசிக்காத இடமாகவும் உள்ள இடத்தில் இவர்கள் தமது இருப்பிடத்தை ஆக்கிக் கொண்டு வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுவரலாயினர். முஸ்லிம்கள் மாத்திரமன்றி முக்குவ மக்களும் இந்நல்லடியார்கட்கு மதிப்பும் மரியாதையும் வழங்கி வரலாயினர். அப்போதிருந்த முஸ்லிம்களின் தலைவர்களின் கவனத்திற்கு இவர்களின் வருகையும், தங்குமிடமும், இவர்கள் அவுலியாக்கள் என்றும் தெரியவந்தது.

மக்கள் நெருசலாக சீவிக்கும் முகைதீன் (சின்னப்பள்ளி) பள்ளியில் வந்தமறுமாறு வேண்டப்பட்டனர். அவர்கள் இன்றைய பெரியபள்ளியின் காட்டுப்பகுதியையே இருப்பிடமாக தேர்ந்தெடுத்தனர். ஊர் பெரியார்கள் அவர்களது விருப்பத்துக்கமைய அவ்விடத்திலேயே இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். எதிர் காலத்தில் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் அதிகரிப்புக்கும், பள்ளிவாசலொன்றின் இருப்புக்கும் வித்திடுவதற்கான தீர்க்கதரிசனமெனலாம். இதனுள் கோசப்பா மத்திய கிழக்கைச் சேர்ந்த சாயலுடையவராகவும், அப்பெண் குழந்தையும் அவரது சாயலாகவும், அவரது சீடன் தென்னிந்திய சாயலுடையவராகவும் காணப்பட்டனர்.

மொழிபெயர்ப்புக்காக சீடன் அழைத்து வரப்பட்டிருக்கலாம். பெண் குழந்தை "உம்முல்குல்தூம்" அழைக்கப்பட்டார். முஸ்லிம் பெண்களால் "நல்லம்மா" என செல்லமாக அழைக்கப்பட்டதாக வாய்வழிவந்த தகவல்கள் கூறுகின்றன. கோசப்பா குடியில் இப்பெண் குழந்தையின் பெய "முக்குலுத்தும்மா" என மருவியுள்ளது. நல்லம்மா எனவும் பரம்பரையாக வந்துள்ளதை அறியலாம்.

கோசப்பா அவர்களினதும், அவரது சீடரினதும் மறைவுக்குப் பின்னர் இப்பெண்குழந்தை சம்மாந்துறையில் ஒரு குடும்பத்தில் வளர்ந்து வாழ்க்கைப்பட்டு குடும்பமாக வாழ்ந்து வரலாயி இவரது சந்ததியினரே இன்று சம்மாந்துறையில் "கோசப்பா குடியினர்" என அழைக்கப்ப வரலாயினர். உம்முகுல்தூம் என்ற பெயரிலோ அவரது கணவரது பெயரிலோ குடி தோன்றா கோசப்பா என்ற நல்லடியார் ஒருவரின் பெயரில் குடி உதயமாகியதில் ஆச்சரியமில்லை.

இறைநல்லடியார்கள் காலஞ்சென்ற அவ்விடத்திலே நல்லடக்கம் செய்யப்பட்டு பள்ளிவாசலொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பள்ளிக்கு "கோசப்பா பள்ளி" என்ற பெயர் வழங்கப்பட்டு வரலாயிற்று. அண்மைக்காலம் வரை முதியோர்களால் கோசப்பா பள்ளி என அழைக்கப்பட்டதையும் அறிவோம்.

1936ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஜும்மா தொழுகைப் பின்னர் ஊர் மக்களின் அனுமதியோடு மெத்தைப்பள்ளி கட்டுவதற்கான ஆரம்ப வேலைக தொடங்கி வைக்கப்பட்டன. தென்னிந்தியாவைச் சேர்ந்த நீடுரைப் பிறப்பிடமாகக் கொண்ட மௌலா ஹாஜி செய்யது முஹம்மது காசிம் என்பவர் கட்டிட வேலைகளுக்கு பொறுப்பாகவிருந்து 1949ஆ ஆண்டில் கட்டிமுடித்து, கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது. முகைதீன் பள்ளியை விட பெரிதாக தலை நிமிர்ந்து காட்சியளித்ததால் "கோசப்பா பள்ளி" "பெரிய பள்ளி" எனவும், "முகைதீ பள்ளி" சிறிதாக காணப்பட்டதால் "சின்னப்பள்ளி" எனவும் அழைக்கப்படலாயிற்று. ஜும் தொழுகையும் பெரிய பள்ளியில் மாத்திரம் நடைபெறலாயிற்று.

சம்மாந்துறை பள்ளிவாசல்களின் நிருவாகம் பெரிய பள்ளிவாசலை மையமாக் கொண் நடைபெறுவதும் கிழக்கிலங்கையின் முதலாவது மெத்தப்பள்ளி கோசப்பா பள்ளியே என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குடியின் மரைக்காராக இருந்த அல்லிலெப்பை யூசுப் அவர்கள் குடியின் நிருவா கட்டமைப்பை மேலோங்கச் செய்வதில் அதிக அக்கறை காட்டியுள்ளார் என்பது அவரா தயாரிக்கப்பட்ட கடித தலைப்புக்கள் போன்ற தஸ்தாவேஜுகள் மூலம் அறிய வந்ததில் அவ சேவையை பாராட்டுகிறோம்.

இக்குடியின் முன்னைய குடிமரைக்கரான அல் ஹாஜ் றாஹிம் அவர்கள் சம்மேளனத்தி தேவையை உணர்ந்து தமது பதவியை தனது சகோதரன் அல் ஹாஜ் SHA.றாஸிக்(J அவர்களுக்கு விட்டுக்கொடுத்த பெருந்தன்மையை பாராட்டுகின்றோம்.

தற்போதைய குடிமரைக்காரான அல் ஹாஜ் SHA.றாஸிக(JP) அவர்கள் அண்மையில் தா மரைக்காராக இயங்கத்தொடங்கிய போதும் தனது குடிகளின் செயற்பாடுகளை ஆராய்ந்து புதி நிர்வாக கட்டமைப்பொன்றை ஏற்படுத்த பாடுபடுவது அறியக்கிடக்கின்றது. அதுமட்டுமல்லாது இவரி செயற்பாடுகளையும் ஆய்வுத்திறனையும் அறிந்து குடிகளின். சரித்திரத்தை தொகுத்து புத்தகமா அமைக்கும் பொறுப்பை சம்மேளனம் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. இதை எமது கோசப் குடிக்கு வழங்கப்பட்ட கௌரவமாக கருதுகின்றோம்.

**தகவல் வழங்கியோர்:**

1. அல் ஹாஜ் SHM.முஸ்தபா(JP) ஓய்வு பெற்ற அதிபர் சம்மாந்துறை.
2. அல் ஹாஜ் ALA.கபூர் Rtd ADE,மார்க்கட் ஒழுங்கை சம்மாந்துறை-06.
3. அல் ஹாஜ் AM.நவாஸ் (இலிகிதர்) பெரியபள்ளி வீதி சம்மாந்துறை.



## சேனைக் குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**

அல் ஹாஜ் உதுமாலெவ்வை இப்றாலெவ்வை(வர்த்தகர்),
9B, பஸார் 05ம் வீதி, சம்மாந்துறை-05.
TP.NO: 0672260615, 22607423

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. அகமது முகாந்திரம் மகுமூதுலெவ்வை (புதுக்காட்டு வட்டானை)
2. அகமது முகாந்திரம் ஆமிதுலெவ்வை வட்டானை.
3. தம்பிமரைக்கார் காதர் மீராசாய்வு.
4. தம்பிமரைக்கார் முகம்மதிஸ்மாயில் ஹாஜி, வர்த்தகர் (ஆலிமு)

"சேனைக் குடி" என்று உச்சரிக்கும் போது பயிர்ச்செய்கையைக் குறிப்பதா? அல்லது படை பட்டாளங்களைக் குறிப்பதா? என்பது பற்றி ஆராயப்படவேண்டிய விடயமாகும். இக்குடியைச் சேர்ந்த முதியவர் ஒருவரிடம் சுமார் பத்துவருடங்களுக்கு முன்பு கதைத்துக் கொண்டிருந்த போது அவர் தந்த தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விபரத்தைத் தொகுத்துள்ளோம்.

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இலங்கையின் வர்த்தகம் முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஏன் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அரசர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் முஸ்லிம்கள் இருந்து வந்துள்ளனர். ஐரோப்பியர்களின் வருகைகளினால் முஸ்லிம்களுக்கும் ஐரோப்பிய (கிறிஸ்தவர்களுக்கிடையில்) குரோதம் வளரத் தொடங்கின. மத்திய கிழக்கில் ஏற்பட்ட முஸ்லிம் கிறிஸ்தவ விரோதம் இலங்கையிலும் தலைதூக்கி வர்த்தகத்தை தனது கைக்குள் கொண்டுவருவதற்காகவும், ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவும் முஸ்லிம்களின் இருப்பு அகற்றப்படவேண்டியதன் அவசியத்தை ஐரோப்பியர் உணர்ந்தனர். இதனால் முஸ்லிம்களுக்கு பலவகையிலும் தொல்லைகள் ஐரோப்பியரால் எற்படத் தொடங்கின. இலங்கையின் மேற்கு தெற்கு பிரதேசங்களில் வசித்த முஸ்லிம்களுக்கு, அங்கு குடியிருப்பதில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாயின.

இலங்கையின் பௌத்த, இந்துக்கள் மத்தியில் கிறிஸ்தவம் பரவலாயிற்று. ஆனால் முஸ்லிம்கள் எப்பொழுதும் தமது சமயத்தை விட்டுக் கொடுப்பவர்களாக இருந்ததில்லை. அதனால் மேற்கு, தெற்கு கரையோரங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் அவ்விடங்களைவிட்டு வெளியேறத் தொடங்கினர். செனரத் அரசன் நாலாயிரம் முஸ்லிம்கள் கிழக்கில் குடியேற்றிய வரலாற்றையும் அறிகின்றோம். செனரத் அரசனின் குடியேற்றியத்துக்கு அப்பாற்பட்ட ஒரு குழுவினர் தனது பாதுகாப்புக் கருதி பொருத்தமான இடங்களை நோக்கி நகரத் தொடங்கினர்.

இவ்வாறு வந்த முஸ்லிம்களில் சிலர் மகாஓயா பிரதேசத்தில் குடியிருப்புக்களை ஏற்படுத்தி குடும்பம் குடும்பமாக வாழத் தொடங்கினர். தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக காடு அகற்றி சேனைப் பயிர் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கண்டிராச்சியத்தின் துறைமுகமாகவும், வர்த்தக சந்தையாகவும் காணப்பட்டது சம்மாந்துறை. சம்மாந்துறையிலிருந்து கண்டிக்கு ஐந்து பாதைகள் இருந்துள்ளதாக அறிகின்றோம். அதில் ஒரு பாதைதான் மகாஓயா பிரதேசத்தின் ஊடாகச் சென்ற பாதையாகும். கண்டிக்கும் சம்மாந்துறைக்குமான "தாவளப்" பாதையில் இச்சேனை பயிர்ச் செய்கையாளர்களை கிழக்கு அதிலும் மட்டக்களப்பு முஸ்லிம்கள் சந்திக்கின்றனர்.

அடிக்கடி போக்குவரத்துச் செய்து வந்த நமது பிரதேசத்து முஸ்லிம்கள் இச்சேனைக்குடியிருப்பாளருடன் உறவாடி, கதைத்து பேசி அந்நியோன்னியத்தை ஏற்படுத்தி வந்தனர். எனவே, இச்சேனைப் பயிர்ச் செய்கையாளர்களான இம்முஸ்லிம்களை தமது பிரதேசங்களில் வந்து வசிக்குமாறு அடிக்கடி வற்புறுத்தி வரலாயினர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் வாழ்வதால் தமது சமய கலாச்சார விழுமியங்களை பேணி வாழலாம் என்ற ஆதங்கத்தில் சம்மாந்துறையை நோக்கி வரத்தொடங்கினர்.

சம்மாந்துறையின் அன்றைய நடைமுறைக்கொப்ப வட்டிவிட்டி அம்பலத்தில் சிலகாலம் இச்சேனைப் பயிர்ச் செய்கையாளர்களான மகாஓயாவில் வசித்தவர்கள் தங்கியிருந்தனர். அங்கும் அவர்கள் சிலகாலம் இச்சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடலாயினர். அன்று சம்மாந்துறையிலிருந்த பள்ளிவாசல் நிருவாகத்தினர், மரைக்கார்மார் தீர்மானம் மேற்கொண்டு இவர்களை சம்மாந்துறையில் வாழ்வதற்கான இடங்களையும், வசதிவாய்ப்புக்களையும் ஏற்படுத்தி கொடுத்தனர். அவர்கள் சம்மாந்துறையிலும் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். சம்மாந்துறையில் அன்று குடிவழிமுறையில் மக்கள் வாழ்ந்து வந்தனர். தாய்வழியைக் கொண்டு இக்குடிப்பரம்பல் இருந்து

வந்தது. ஆனால் இவர்கள் குடும்பம் குடும்பமாக சம்மாந்துறையில் குடியேறியமையால், அவர் அனைவரையும் "சேனைக் குடி"யினர் என்றே அழைக்கப்படலாயினர்.

ஒரு பெண்வழியிலிருந்து இக்குடி பரவாமல் ஒரு தொழில் செய்யும் ஒரு கூட்டத்தினை மையமாகக் கொண்டு இப்பெயர் வழங்கலாயிற்று. அத்துடன் இக்குடி முஸ்லிம்களிடத்தில் மாத்தி வழக்கத்திலிருப்பதையும் அவதானிக்கலாம். தமிழ் தாய்வழித் தொடர்பினால் முஸ்லிம்களிடத்தி குடிமரபு பின்பற்றி வந்தாலும், சேனைக்குடி வேறு மாகாணத்திலிருந்து வந்து குடியேறிய குடும்பங்களுக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இப்படி பல குடிகள் முழுக்க முழுக்க முஸ்லிம் வழிமுறையில் பெருகியதையும் அவதானிக்கலாம்.

சம்மாந்துறையில் மாத்திரமன்றி சாய்ந்தமருது,கல்முனைக்குடி, பாலமுனை போன்ற ஊர்களி சேனைக்குடி வழக்கில் இருந்து வருவது அவதானிக்க முடிகிறது. மாளிகைக்காடு கிராமத் இக்குடியின் முன்னோர் சேனைப் பயிர் செய்து வந்ததாகவும் அறியமுடிகின்றது.

**தகவல்கள் வழங்கியோர்:**

1. அல் ஹாஜ் A.சுலைமாலெவ்வை (GNS), 275A,பஸார் 7ம் வீதி, சம்மாந்துறை-05.
2. அல் ஹாஜ் ULM.சலீம் சமுத்தி மனேஜர், 164,கீச்சார் லேன், சம்மாந்துறை-04.

AMIRALI PUBLIC LIBRARY
Samanthurai
11 NOV 2011
அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை -சம்மாந்துறை



## படையான் குடி

**பெரிய படையான் குடியின் தற்போதைய குடிமரைக்கார்**
அல்ஹாஜ் முஹம்மதிஸ்மாயில் அப்துல் றஸாக் வ.வி
365,பஸார் 7ம் வீதி, சம்மாந்துறை-05.
TP.NO: 0672260120.

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்**

1. அகமது லெவ்வை ஹாஜி அச்சி முஹம்மது போடி (ஹஜ்ஜுப் போடியார்)
2. அல்ஹாஜ் TPH.முஹம்மதுத் தம்பி (தம்பிலெவ்வைப் போடியார்)
3. அல்ஹாஜ் Dr MYM.முஸ்தபா (முஸ்தபா டொக்டர்)
4. அல்ஹாஜ் MIM.ஹனிபா (ஓய்வுபெற்ற AI)

**பெரிய படையாண்ட குடியின் தற்போதைய குடிமரைக்கார்**
M.T மீராலெவ்வை வர்த்தகர்,
336/04, மல்-07ம் வீதி,புளக் "ஜே" கிழக்கு சம்மாந்துறை.
TP.NO: 0672260351.

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்**

1. A. முகைதீன் பாவா(கறுத்த மோதினார்)
2. SM.வரிசை முஹம்மது (கறுத்த மோதினார் மருமகன்)

1940 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்பின் பிரகாரம் 16 குடிகள் மாத்திரம் காணப்படுகின்றன. அதில் ஏழாவது இடத்தில் சின்னப்படையான் குடி என உள்ளது. பெரியபடையான் என்ற குடிக்கான ஆதாரம் இல்லை. சின்னப்படையான் குடிக்கு அப்போது குடிமரைக்காராக அகமது லெவ்வை ஹாஜி அச்சிமுஹம்மது போடி (ஹஜ்ஜிப் போடியார்) இருந்துள்ள குறிப்பும் பதியப்பட்டுள்ளதைக் காணலாம்.

"மஜ்லிஸ் அஷ்ஷுரா" ஆரம்பிக்கும் 1980 க்குப் பிந்திய காலகட்டத்தில் நம்பிக்கையாளர் சபையின் ஆவணத்திலுள்ள குடிமரைக்கார் பட்டியலின்படி:

பெரியபடையான் குடி, சின்னப்படையான் குடி என இரண்டு படையான் குடிகளின் பதிவுகள் காணப்படுகின்றன. பெரியபடையான் குடி தங்களுக்கே உரியது என இரண்டு படையான் குடி மரைக்கார்மார்களும், அக்குடிகளைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்களும் வாதிட்டனர். இப்பிரச்சினையை அப்போதைய நிருவாகம் பின்வருமாறு சுமூகமாக தீர்த்து வைத்தது அவை.

02.பெரிய படையாண்ட குடி என்பனவாகும்.
01.பெரிய படையான் குடி

நமது ஊரில் மாத்திரம் தான் படையான் குடி பெரிய, சிறிய என இரண்டு பிரிவாக அழைக்கப்படுகின்து. ஒரு காலத்தில் ஒருகுடியாக மாத்திரம் இருந்திருக்கலாம். குடும்பத் தலைமைப் போட்டி, ஆதிக்கத் தன்மையினால் இரண்டாகப் பிளவுபட்டிருக்கலாம். அதன் வரலாறு இங்கு அவசிமியல்லை. படையான் குடிக்கான காரண காரியத்தை பார்ப்போம், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள எல்லா தமிழ் முஸ்லிம் ஊர்களிலும் படையான் குடி வழக்கத்திலிருப்பதைக் காணலாம். குறிப்பாக சம்மாந்துறை, வீரமுனை, முக்குவர் வட்டை போன்ற இடங்களிலும் தமிழ் முஸ்லிம் மத்தியில் படையான் குடி நடைமுறையிலுண்டு. முக்குவர்கட்கும், பட்டாணியர்கட்கும் இடையிலான திருமண பந்தம் ஏற்பட்ட முக்கிய குடிகளில் படையான் குடியைச் சேர்ந்த பெண்கள் அதிகம் பேர் சம்பந்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

முதலியார் திரு SO.கனகரத்தினம் அவர்கள் மட்டக்களப்புச் சரித்திரத்தைக் கூறும் தமது ஆங்கில நூலில் முக்குவ குலத்திற்கான குடிகளின் ஏழு பெயர்களை பட்டியலிட்டுள்ளார். உலவிப்போடி குடி, காலிங்கா குடி, படையாண்ட குடி, பெத்தாண்ட குடி, பணிக்கனா குடி, கச்சனா குடி, பெத்தாண்ட படையாண்ட குடி என்பனவாகும். மட்டகளப்பு கோயில்களில் காணப்படும் "முக்குவர் வன்னிமைக் கல்வெட்டு", "சாதித் தெய்வக் கல்வெட்டு", "திருப்படைக் களஞ்சிய கல்வெட்டு" என்ற பட்டயங்களின் படி முக்குவர்களும், அவர்களது குடிமுறைகளும் மிகப்பழமையானது. இலங்கையின் ஆதிக்குடிகள் என்பதும் புலனாகின்றது.

எனவே, தமிழர்கள் முஸ்லிம்கள் மத்தியில் படையான் குடி ஆரம்பக் குடிகளில் ஒன்றாக அறியப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். கலிங்க மன்னருக்கு மிக நெருங்கிய படைத்தலைவராக பணியுரிந்தோரின் சந்ததியினர் படையாட்சி குடியினர் அல்லது படையான் குடியினர் என

அழைக்கப்படலாயினர். கொக்கட்டிச் சோலை கோயில் தொடர்புகள் முதலியவற்றிலே கூடிய ப
கொள்ளும் முதன்மைக் குடிகளில் படையான் குடியும் முக்கியமானது. மட்டகளப்பு கிராமங்க
கலியாணம், பெண்கள் புத்தியறிதல் போன்ற சடங்குகளின் போது கூரை முடி வைக்கும் பழக்க
இருந்துள்ளது. ஒவ்வொரு குடிக்கும் கூரை முடிகளின் எண்ணிக்கை மாறுபட்டிருக்
குலவிருதுப்படி கூரை முடிகள் வைக்கப்படாத சடங்குகளை பொதுமக்கள் மதிக்
சம்பிரதாயங்களும் அன்று நடைமுறையிலிருந்துள்ளது.

எனவே, படையான் குடியார் சடங்குகளின் போது கையாளப்பட வேண்டிய குலவிருது ப
"மட்டகளப்பு தமிழகம்" பின்வருமாறு கூறுகின்றது,

"ஒன்பது கூரைமுடி, ஒன்பது சீலை, நீலபாவாடை, தென்னம்பாளை, இரண்டு பந்தல் இடவும்"
இன்று இச்சம்பிரதாயங்கள் எல்லாம் மறைந்து விட்டதை அறிவோம்.

இக்குடியைச் சேர்ந்த ஒரு மூதாட்டியைச் சந்தித்த போது, இக்குடிக்கு வேறு பெயர்
இருக்கின்றதா? என வினவினோம். "பெத்தாண்ட படையான் குடி" என்ற பெயரை உச்சரித்
முக்குவர் வட்டையிலிருந்த முதியோர்களும், சம்மாந்துறையிலிருந்த முஸ்லிம் முதியோர்க
ஒருவரையொருவர் சந்திக்கும் போது, படையான் குடி உறவு முறையினால் சொந்தம் கொண்ட
கொண்ட அனேக சம்பவங்களையும் கேள்விப்படுகின்றோம். இப்படிப்பட்ட நெஞ்சைத் தொ
சம்பவமொன்று வீரமுனைக் கிராமத்தில் மிக அண்மைக் காலம் வரை பேசப்பட்டு வந்துள்
வீரமுனையை அண்டிய பள்ளிவாசல்களில் குறிப்பாக பெரியபள்ளியில் தொழுகைக்கான "அத
பாங்கு" ஒலிக்கும் போது படையான் குடியைச் சேர்ந்த தமிழர்களைப் பார்த்து ஏனைய தமிழர்
"உங்கட ஆட்கள் கூப்பிடுறாங்க போகல்லியா" என்பார்களாம். இவ்விடயத்தை வீரமுனை
சேர்ந்த பல முதிய தமிழ் பெரியார்களும் காலஞ்சென்ற இரண்டு அதிபர்களும், தற்போ
அச்சொற்பிரயோகங்கள் வழக்கத்தில் இல்லாவிட்டாலும் சென்ற காலங்களில் பரிமாற்றப்பட்ட
உறுதிப்படுத்தினர். "படையான் குடி" தமிழ் முஸ்லிம் உறவின் ஒரு "மேன்பாலம்" எ
கொள்ளலாம்.

பெரிய படையான் குடியின் மரைக்காராகவும் சம்மேளனத்தின் தலைவராகவுமிருந்த அல் ஹா
TPH.முஹம்மதுத்தம்பி அவர்கள் 1978ல் நம்பிக்கையாளர்சபை, வக்புசபை பொதுமக்க
ஆகியோர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையில் "ஜிஹாத்" செய்யவதற்கும் தயாராக முன்வந்த
என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் தன்னலமற்ற சேவையை உணர்ந்த மக்கள் நம்பிக்கையாள
10 வருடங்களுக்கு மேல் கடைமையாற்ற சந்தர்ப்பம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

தகவல் வழங்கியோர் :

- ❖ பெரிய படையான் குடி
  1. MBM.பஸீல் (நிலைய பொறுப்பதிகாரி, பிறை FM அக்கரைப்பற்று)
  2. Dr MCM.காலித் BUMS (அமீர் அலி வீதி, சம்மாந்துறை)



## ஆதம்பட்டாணி குடி

இக்குடியின் தற்போதய குடி மரைக்கார்
அல் ஹாஜ் முகம்மதுத்தம்பி போடி முகம்மது சஹீட்(MSc).
சிரேட்ட இணைப்பாளர் தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தித் திட்டம்(TEDP).
06, முதலாம் குறுக்குத் தெரு, சம்மாந்துறை-07.
TP.NO:0672260555

இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்துள்ளவர்களின் விபரங்கள்:

1. ஆதம்லெவ்வைப் போடி உதுமாலெவ்வைப் போடி.
2. A.அகமது லெவ்வை (பெரியநேந்தலா வ.வி)
3. SVV.முகம்மதிஸ்மாயில் (சப்பாத்தர் வெள்ளத்தம்பி)

1941 ஆம் ஆண்டில் சம்மாந்துறையில் பட்டியலிடப்பட்ட 16 குடிகளில் ஆதம்பட்டாணி குடி
இரண்டாம் இடத்திலிருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. "சோழியக் குடி" என்றும் இக் குடிக்கு
இன்னொரு பெயர் வழக்கிலுண்டு. "சோழியன்" என்பது சோழ நாட்டானைக் குறிப்பதாகும். சோழியன்
என்பதற்கு "வேளாளர்" என்ற அர்த்தமும் உண்டு. "ஈகையாளர்" என்ற கருத்தைக் கொடுக்கும்.
வேளாளர் என்ற பதம் இந்துக்கள் மத்தியில் உயர்ந்த சாதியினரையும் குறிப்பதாகும். "சோழியர்"
என்பதற்கு ஒரு சாதியினர் என்ற கருத்தும் உண்டு.

"ஆதம்" பட்டாணி என்ற இரு பதங்களின் இணைப்பினால் இக்குடிக்கு ஆதம் பட்டாணி என்ற
பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. ஆதம் என்ற பெயரை ஒருவரை சுட்டிக்காட்டுவதாக எடுத்துக்
கொண்டு பட்டாணி என்ற பெயரின் கருத்தை நோக்குவோம். வங்காள விரிகுடா "அரேபியர்களின்
(ARABIAN LAKE) என்று அழைக்கப்படும் அளவிற்கு அரேபியர்களின் வியாபார கப்பல்கள் வந்து
போய்கொண்டிருந்தன. இவ்வாவியில் அரேபியர்கள் மாத்திரம் அன்றி பட்டாணிகளின் கப்பல்களும்
நடமாடின. பட்டாணியர் ஆப்கானிஸ்தான் அல்லது வடஇந்தியா போன்ற இடங்களிலிருந்து வந்த
வியாபாரக் குழுவினர் எனக்கருத இடம் உண்டு. இந்தியாவில் எல்லைப்புற மாகாணம்,
ஆப்கானிஸ்தான் என்பவற்றில் வாழ்ந்தவர்களை பட்டாணியர்கள் என அழைப்பதுண்டு.

பொட்டணி வியாபாரிகளாக பிரவேசித்தவர்களை பட்டாணிகள் என்று ஏறாவூர் வரலாறு
குறிப்பிடுகின்றது. "பொட்டணம்" என்பதுதான் பொட்டணியாக அழைக்கப்பட்டிருக்கலாம். மூட்டை,
பொதி என்ற அர்த்தத்தை கொடுக்கும் பதம்தான் பொட்டணம். மட்டக்களப்பு பிரதேசத்தின் பொட்டணி
வியாபாரத்தில் ஈடுபட்ட இம் முஸ்லீம்களை அப்பகுதியில் வாழ்ந்த முக்குவர் பொட்டணிக்காரர் என
அழைக்கப்பட்டு வந்தமையால் பட்டாணியாக, பட்டாணியர்களாக மாற்றமடைந்து இருக்கலாம் என்ற
அபிப்பிராயங்களும் உண்டு. இக்காலத்தில் பட்டாணியர்களும் அரேபியர்களும் பட்டாணியர்களாகவே
முக்குவர்களால் அழைக்கப்பட்டிருக்கலாம். ஏனென்றால் புத்தளத்தில் வாழ்ந்த முக்குவர்களுக்கு
அரேபியர்களும் மட்டக்களப்பில் வாழ்ந்த முக்குவர்களுக்கு பட்டாணியர்களும் உதவியுள்ளனர்.

பட்டாணியர்களும், அரேபியர்களும் பருத்ததோற்றமுடையவர்களாளவும், பலசாலிகளாகவும்,
திடகாத்திரமானவர்களாகவும் தோற்றமளித்தனர். இவ்வாறுவந்த முஸ்லிம் வியாபாரிகளின் பிடவை
வியாபார வர்த்தக நிலையமாக சவளக்கடை ஒருகாலத்தில் திகழ்ந்திருந்தகாக அறிகின்றோம்.
"ஜவுலிக் கடை" தான் சவளக்கடையாக மாற்றமடைந்ததாக கூறப்படுகின்றது. திமிலருடைய
தாக்குதலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக முக்குவர்கள் மேலே குறிப்பிட்ட பட்டாணியர்களின்
உதவியைக் கோரியதும், அப்பாட்டாணியர்களை தொடர்ந்து இங்கேயே தங்கவைப்பதற்காகவும்
திருமண பந்தங்களை ஏற்படுத்தலாயினர். முக்குவர்களிடையே காணப்பட்ட ஏழு குடிகளிலிருந்தும்
பட்டாணி இளைஞர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டன. இவ்வாறு திருமணம் முடித்த
முக்குவப் பெண்கள் தமது கணவன்மார்களின் சமயத்தைப் பின்பற்றினார்கள். அதே வேளை
அவர்களிடையே காலாகாலமாக பின்பற்றி வந்த தாய்வழி குடிப்பாரம்பரியத்தை தமது பரம்பரையிலும்
கொண்டு செல்லலாயினர். பட்டாணிய தகப்பன்மார் தமது மனைவியர்களின் குடிப்பெயரை தமது
பரம்பரைக்கும் இட்டுச் செல்வதிலும் எதிர்ப்பு காட்டவில்லை. இதனால் மட்டகளப்பு அம்பாரை
பிரதேசங்களில் தாய்வழி குடிமுறை பின்பற்றப்பட்டு வருவதை காண்கின்றோம்.

"பட்டாணி குடி" என்றில்லாமல் ஆதம்பட்டாணி குடி என்று ஏன் வந்தது என ஆராய்வோமாயின்
ஆதம் என்னும் பட்டாணி ஒருவர் பிரபல வியாபாரியாகவும், செல்வாக்குள்ள பிரமுகராகவும், நீதி
நியாயம் கூறும் முக்கியஸ்த்தராகவும் விளங்கினார். இவர் படையாண்ட குடியைச் சேர்ந்த ஒரு
பெண்ணை திருமணம் முடித்தார். ஆனால் இவரது சந்ததியினருக்கு அவரது மனைவியின் குடிப்

பெயர் வழங்கப்படாமல் ஆதம் என்பவரின் முக்கியத்துவம் கருதி அவரது பெயரால் "ஆதம் பட்டா
குடி" என்ற ஒரு புதுக் குடி தோன்றலாயிற்று. இக்குடி சம்மாந்துறை நற்பிட்டிமுன
அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் மாத்திரம் வழக்கிலுள்ளதை காண்கிறோம். எனவே ஆ
பட்டாணி குடி சம்மாந்துறையில் தான் முதன்முதல் தோன்றியிருக்கவேண்டும்
கருதவேண்டியிருக்கிறது.

பட்டாணியர்களை முக்குவர்கள் எவ்வாறு மதித்தார்கள் என்பதற்கு ஏறாவூர் எனும் வரலா
நூலின் ஐந்தாம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள ஆதாரத்தை அப்படியே முன்வைக்கிறோம். "இப்ப
தமிழ் கோயில்களில் மடை வைக்கும் போது பட்டாணி மடை வைக்கப்படுவதும் கொக்கட்
சோலை கோயிலில் வருடம் தோறும் நடைபெறும் தேர்த்திருவிழாவில் முஸ்லீம் ஒருவருக்கு
பிடித்து இழுப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதும்" ஆதாரங்களாகும். இன்னும் பற்
கோயில்களில் பட்டாணியர்களுக்காக மடை வைத்து அவர்களை சங்கைப்படுத்துவதும் வழக்
இருந்ததாக முதியோர்கள் மூலம் அறியமுடிகின்றது. இலங்கையின் கிழக்குப் பாகத்தில் அதிகரி
முஸ்லீம்களின் இருப்புக்கு பட்டாணியர்களின் வருகையும் முக்குவர் பட்டாணியர் திரும
உறவுகளும் காரணமாக அமைந்திருந்தன எனின் மிகையாகாது.

இக்குடியின் தற்போதைய மரைக்காரான அல் ஹாஜ் MTM.சஹீட் அவர்கள் வேலைப்
காரணமாக கூட்டங்களுக்கு சமூகமளிக்க அதிக சந்தர்ப்பம் கிடைக்காவிடினும் சந்தர்ப்பம் கிடைக்
போதெல்லாம் குடிகளின் சம்மேளனச் செயற்பாடுகளுக்கும், கௌரவத்தை பாதுகாப்பதற்கும் அ
ஈடுபாடு காட்டுவதை போற்றத்தக்க செயலாக கருதுகின்றோம்.

**தகவல் வழங்கியோர்:**
1. அல் ஹாஜ் MTM.றாஸிக்(PM) பெரிய பள்ளி வீதி, சம்மாந்துறை-8
2. அல் ஹாஜ் ALM.காஸிம்(Eng) MP றோட், சம்மாந்துறை-8



## ஓடாவி குடி

**01. நெய்னா ஓடாவி குடி**
**இக்குடியின் தற்போதய குடி மரைக்கார்:-**
அல் ஹாஜ் அகமது லெவ்வை முகம்மது யாசீன்(JP), ஓய்வுபெற்ற ஆசிரியர்,
1,பஸார் 10ம் வீதி, சம்மாந்துறை-06
TP. No: 0672260289, 0776485248
**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**
1. அல் ஹாஜ் IL.ஹபீப் முகம்மது(பெரியசங்கத்து மனேஜர்) 1952 -1967
2. அல் ஹாஜ் AL.அப்துல் றகீம்(அயிசார் ஹாஜியார்) 1967 -1983

**02. ஓடாவி குடி அல்லது காலிங்கா ஓடாவி குடி**
**ஓடாவி குடி அல்லது காலிங்கா ஓடாவி குடியின் தற்போதய குடி மரைக்கார்:-**
அல் ஹாஜ் அலியார் லெப்பை முகம்மது இஸ்மாயில் (பட வரைஞர்)
381,முதலாம் குறுக்கு தெரு, சம்மாந்துறை-07
TP. No : 0673672526
**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**
1. உப்புக் கொச்சிக்காயர். 1960க்கு முன்.
2. IL.சின்னத்தம்பி வ.வி(விசாரை வட்டானை மகன்). 1960 -1996

**03. கச்சன் ஓடாவி குடி**
**கச்சன் ஓடாவி குடியின் தற்போதய குடி மரைக்கார்:-**
செய்னுல் ஆப்தீன் காரியப்பர் அகமது லத்தீப் காரியப்பர்,
76/10, M.சென்னல்கிராமம்-01, சம்மாந்துறை.
TP. No:0716164049
**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**
1. அல் ஹாஜ் MA.பக்கீர் முகையதீன் (மம்மிசார் மகன்)

சம்மாந்துறையில் ஓடாவி குடி மேற்குறிப்பிட்ட மூன்று வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு
வருவதை அவதானிக்கலாம். 1940 ஆண்டில் கிடைக்கப்பெற்ற ஒரு ஆவணத்தில் நெய்னா ஓடாவி
குடி மாத்திரமே இருந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மூன்று ஓடாவி குடிகளும் ஒரு ஓடாவி குடியிலிருந்துதான் பிறந்ததா? அல்லது தொழில்
நுணக்க முறையிலான பிரிவுகளால் தனித்தனியாக உருவானதா? என்பன போன்ற விபரங்களை
அறிந்து கொள்வதில் ஆதாரங்கள் பூரணமாகக் கிடைக்கவில்லை. தென்கிழக்குப் பிரதேசத்தில்
ஓடாவி குடிகள் எல்லா ஊர்களிலும் பரவலாக நடைமுறையிலிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இம்மூன்று ஓடாவி குடியினரும் பொதுவாக ஒரே வகையான தொழிலை மேற்கொண்டிருந்தாலும்,
ஒவ்வொரு வகையினரும் தம்மிடமுள்ள விசேட திறமைகள் காரணத்தால் சிறப்புப் பெற்றிருந்தனர்.
வீடுகட்டுதல், வண்டில், கரத்தை செய்தல், கதிரை, கட்டில், மேசை போன்ற தளபாடங்கள் செய்தல்
என்பவர்களையும் பொதுவாக ஓடாவி என்றுதான் அழைப்போம். நமதூரில் ஓடாவிமார்கள் இருந்தும்,
சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு நல்ல, திறமையான, உறுதியான, நின்று நிலைக்கக்கூடிய
வண்டில்கள் செய்வதற்கு காத்தான்குடிக்குச் சென்றுதான் பலநாட்கள் அங்கு தரித்துநின்று செய்து
வந்ததாக நமது முன்னோர்கள் கூறுவர். இப்படி துறைசார்ந்த தொழிலின் மூலம் நமது மூன்று ஓடாவி
குடிகளும் வேறு வேறு விதமான பெயர்களால் அழைக்கப்படலாம்.

வீடு கட்டுபவர்களை "தச்சர்" என்பார்கள். "தச்சுக்கழித்தல்" என்பதற்கு அகராதியில் புதுவீட்டில்
குடியிருப்பதற்கு முன் தச்சர்களால் செய்யப்படும் சடங்கு என விபரிக்கப்படுகின்றது. இதன்
அடிப்படையில் பார்த்தால் வீடு கட்டுவதற்கும் தச்சர் என்ற சொல்லுக்கும் நெருங்கிய பொருத்தம்
இருப்பதை அவதானிக்கலாம்.

ஓல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் "வாச்சு" என்ற ஆயுதத்தால் மரங்களைச் செதுக்கி
பயன்படுத்தியதாக அறிகின்றோம். கைமரங்கள் வளைகள், கதவு நிலைகள், தூண்களைக்கூட வாச்சு.
ஆயுதத்தால் செதுக்கி வீடுகளை நிர்மானித்தவர்களை மக்கள் தச்சர் என அழைத்திருப்பர்.
மரவேலை செய்பவர்களை பொதுவாக "ஓடாவி" என்றாலும், வீடுகட்டும் துறை சார்ந்தவர்களை
தச்சர் என வழங்கப்பட்டு வந்துள்ளது. தச்சர் என்ற சொல் கச்சன் ஓடாவிகுடி என மருவியுள்ளது.
அக்கரைப்பற்று, கல்முனைக்குடிபோன்ற இடங்களில் தச்சனா ஓடாவி குடியென்பதுதான்

“கச்சனா ஓடாவி கு
வழக்கத்திலுள்ளது. சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை போன்ற இடங்களில் என்றுதான் அழைக்கப்படுகின்றது.

ஓடாவி குடியினர் வண்டில்கள், கரத்தைகள் செய்வதில் சிறப்புப் பெற்றிருந்தனர். இவர்கள் தம வீடுகளில் “ஓடாவிக் கம்மாலை” அமைத்து வண்டில்களுக்கு தேவையான சில்லு, குப தெப்பக்கட்டை, மூக்குனை, நுகம், மரைக்கால் சட்டம் என்பவற்றை நுணுக்கமாகச் செய்வர். மேலு மண்வெட்டிபிடி, கத்திப்பிடி, கோடாரிப்பிடி, பிள்ளைகளை நடை பழக்கும் நடை வண்டில், குர்ஆ வைத்து ஓதும் றைகால் என்பனவும் இவர்களால் செய்து கொடுக்கப்படும் பொருட்களாகும்.

தென்கிழக்கு பிராந்தியத்தில் ஓடாவி குடி பரவலாக எல்லா ஊர்களிலும் வழக்கத்தி இருப்பதைக் காணலாம். இக்குடிக்கு காலிங் ஓடாவி குடி என்றும் அழைப்பர். முக்குவர்களிடை “காலிங்காகுடி” என்ற பெயரில் ஒரு குடியிருப்பதும் நோக்கப்படத்தக்கது. 13ம் நூற்றாண்டில் கலிங் தேசத்து அரசன் இலங்கையை ஆட்சிபுரிந்தபோது, கலிங்க நாட்டிலிருந்து பற்பல தொழி புரிபவர்களை இலங்கைக்கு அழைத்து வந்துள்ள வரலாறு உண்டு. அப்படி வந்தவர்களில் ஓடாவி தொழில் புரிபவர்களும் வந்திருக்கலாம். அதனால், அது காலிங்கா ஓடாவி என்றிருக்குமா? என்பு ஆராயப்படவேண்டியது.

சம்மாந்துறை, அக்கறைப்பற்றில் நெய்னா ஓடாவி குடி என்று அழைக்கப்படுவது கல்முனைக்குடியில் நெய்னால் ஓடாவி குடி என்றும், அட்டாளைச்சேனையில் நெய்னா முஹம்மது ஓடாவி குடி என்றும் அழைப்பது வழக்கத்திலுண்டு.

ஓடாவிகளில் இன்னுமொரு சிறப்புப் பிரிவினர் கப்பல் கட்டுபவர், பழுதுபார்ப்பவர்கள், தோ வள்ளங்கள் செய்பவர்கள். அரபு தென்னிந்திய கலப்பினத்தவர்களே இத்தொழில் ஈடுபட்டுள்ளனர்.நீர்வழிப் பாதைக்கான சாதனங்களை நிர்மாணிப்பதில் வல்லவர்களாக இருந்துள்ளன இதனால் இவர்களை “நெய்னா” என மரியாதை நிமித்தல் அழைக்கப்பட்டனர். தென்னிந்தியாவி இன்றும் கூட மரியாதைக்குரியவர்களை “நெய்னா” என்றழைப்பதைக் காணலாம். ஓடாவி தொழிலில் கப்பல் கட்டுதல் மிகவும் திறமையான தொழிலாக கருதப்படுகின்றது. பல நூ வருடங்களுக்கு முன் சம்மாந்துறை துறைமுகமாக இருந்துள்ள வரலாற்றைக் காணலாம்.

வியாபார நோக்கமாகவும், பாவாஆதம் மலையைத் தரிசிக்கும் நோக்கமாகவும் வருகைதரு மத்திய கிழக்கு வாசிகளும், இந்திய வாசிகளும் மட்டக்களப்பு வாவியூடாக பிரயாணஞ் செய் சம்மாந்துறை துறைமுகத்தில் கப்பல்களைக் கட்டிவிட்டுத்தான் செல்வர். கப்பல்கள், படகுக பழுதுபார்க்கும் இடமாகவும் சம்மாந்துறை துறைமுகம் இருந்துள்ளது. கண்டி இராச்சியத்தி துறைமுகம் சம்மாந்துறை துறைமுகம்தான் என்றால் மிகையாகாது. ஓடாவித் தொழிலில் மிகவு திறமையான, நுணுக்கமாக கப்பல் கட்டுதல் பழுதுபார்த்தல் சிறப்பான இடத்தை வகிக்கின்றத சம்மாந்துறைக்கு பாய்மரக் கப்பல்களில் வந்த இவர்களில் சிலர் கப்பல் திருத்துபவர்களாகவும் கப்பல் நிர்மானிப்பவர்களாகவும் இருந்த காரணத்தால் இவர்களை “நெய்னார்” என அழைக்கப்பட்டனர். கப்பல்கள் நிர்மானிக்கும் தொழில் சம்மாந்துறை துறைமுகத்தில் நிரந்தரமா காணப்பட்டதால், அத்தொழிலை மேற்கொண்டோர் இங்கேயே தங்கி குடிபதிகளாக வாழ் தொடங்கினர். ஆணுடைய பெயரில் தோற்றம் பெற்றாலும், நடைமுறையிலிருந்த தாய் வழி முறையில் பின்பற்றப்படலாயிற்று.

ஓடாவி குடிப் பெண்கள் இரட்டை முக்காடு அணிபவர்களாக இருந்துள்ளதாக மூதாட்டி ஒருவர் கூறினார். அத்துடன் வேறு குடிப்பெண்கள் இரட்டை முக்காடு போடுவதை ஓடாவி குடிப் பெண்கள் ஆட்சேபித்து, தனது குடிக்கு மாத்திரம்தான் இரட்டை முக்காடு உரிமையானது எனவும் பிடிவாதம் பிடித்து சபைகளில் நடந்து கொள்வர்.

நெய்னா ஓடாவி குடியின் குடிமரைக்காராக இருக்கும் அல் ஹாஜ் ALM.யாஸீன்(JP) அவர்கள் “மஜ்லிஸ் அஷ்ஷூரா” யாப்புத் திருத்தம், பெரிய பள்ளிவாசல் புனரமைப்பு போன்றவற்றில் கூடிய ஈடுபாட்டு காட்டி உழைத்தவர், உழைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இவருக்கு சம்மேளனத்தின் சார்பில் நம்பிக்கையாளர் சபையில் ஓராம் பருவத்தில் நம்பிக்கையாளராக பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டதும், இவரின் திறமையை அறிந்த நம்பிக்கையாளர் சபை இவரை உள்ளக கணக்காய்வாளராக நியமித்து சிறப்பான சேவையைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஓடாவி குடி மரைக்காரான அல் ஹாஜ் ALM.இஸ்மாயில் அவர்கள் தமது தொழில் காரணமாக சம்மேளனக் கூட்டங்களில் பங்குபற்றும் சந்தர்ப்பம் குறைவாயினும் குடியின் உயர்ச்சிக்கும், சம்மேளனக்கின் வளர்ச்சிக்கும் அயராது உழைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கச்சன் ஒடாவி குடியின் மரைக்காராக இருந்த அல் ஹாஜ் MA.பக்கீர் முஹைதீன் அவர்கள் நீண்ட காலம் குடிமரைக்காராக இருந்தவர் என்பதும், குடியின் சம்மேளனத்தின் செயற்பாடுகளில் கூடிய அக்கறை செலுத்தி செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



தகவல் வழங்கியோர்

- நெய்னா ஓடாவி குடி
  1. அல் ஹாஜ் MI.யாசின் பாவா (முன்னாள் MPCS மனேஜர்), சம்மாந்துறை.
  2. AA.ஜப்பார் (Elacrtrica Foaman), பிரதான வீதி, சம்மாந்துறை.
- ஓடாவி குடி
  1. அல் ஹாஜ் A.இஸ்மாலெவ்வை (மபாஸா பள்ளிவாசல் தலைவர்)
  2. அல் ஹாஜ் I.குழந்தையர் (றஹீம் பிரதர்ஸ் வாப்பா)
- கச்சன் ஓடாவி குடி
  1. IL.முஹம்மது ஜலீல் (ஜலீல் ஜீ), அம்பாரை வீதி, சம்மாந்துறை.
  2. SL.அப்துல் அஸீஸ், மலையடி 4, சம்மாந்துறை.

## வடக்கனா குடி

இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:
அல் ஹாஜ் அபூபக்கர் லெவ்வை அப்துல் றஹ்மான் மௌலவி,
336, எம் பி ரோட், சம்மாந்துறை-08.
TP.NO: 0671800958.

இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:

1. சி.ம.உதுமாலெவ்வை (ஒல்லுப்பிச்சைமரைக்கார்).
2. ஆமீதுலெவ்வை அலியார் (சோளியர் மகன்).
3. மீராலெவ்வை கலந்தர் லெவ்வை (மம்பட்டியர் மகன்).
4. இஸ்மான் முல்லை சுலைமா லெவ்வை (சொர்க்கர் மகன்).
5. முகம்மதுத்தம்பி உதுமாலெவ்வை (பொட்டியர் மகன்).
6. முகம்மதுத்தம்பி சீனிமுகம்மது ஹாஜி (சீச்சி ஹாஜியார்).

மேலும், மஞ்சல் உடையார், நெருப்புக்குச்சியர் போன்றவர்களும் இக்குடியின் மரைக்கார்களாக இருந்துள்ளதாக அக்பர் மௌலவியின் தாயார் கூறியுள்ளார். ஆனால் சரியான தகவல்கள் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

ஆண்கள்,பெண்கள், ஊர்கள், தொழில்கள் போன்றவற்றின் பெயர்களைக் கொண்டு குடிகளின் பெயர்கள் வழக்கத்திலிருந்து வருவதைக் காண்கின்றோம். ஆனால் திசையை பெயராக கொண்டு இக்குடிக்கு பெயர் வைக்கப்பட்டிருப்பதை அவதானிப்போம். வடக்குத் திசையிலிருந்து வந்தவர்களின் முக்கியத்துவம் இதனால் உணரப்படுகின்றது.

இக்குடிக்கு "இலவ வடக்கனா குடி" என்றும் "லெவ்வை வடக்கனா குடி" என்றும் அழைப்பதுண்டு. விசேடமாக பெண்கள்தான் இப்பெயரை உச்சரிப்பர். இலங்கைக்கு வருகை தந்த இந்தியர்களை இலங்கையர்கள் குறிப்பாக தென்கிழக்குப் பிரதேசத்தில் வசித்தோர் சம்மான்காரர், மலையாளத்தவர்கள், இந்தியர் என பற்பல பெயர்களில் அழைப்பர். அப்படி வந்தவர்களின் முக்கியத்துவம் கருதி அவர்கள் வருகை தந்த காலத்தின் அவசியம் அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்.

வடக்கு என்னும் போது வடமாகாணத்தை குறிப்பிடப்படுகின்றதா? அல்லது இலங்கையின் வடக்கு திசையிலுள்ள இந்தியாவைக் குறிக்கின்றதா? அல்லது இந்தியாவின் வடபிராயந்தியத்தை குறிக்கின்றதா? என்றெல்லாம் நாம் நோக்கவேண்டியிருக்கின்றது. இந்தியாவின் வடபிராயந்தியத்தை டில்லியைத் தலைநகராக முகலாய சாம்ராச்சியம், இன்னும் பற்பல இஸ்லாமிய இராச்சியங்கள் ஆட்சிபுரிந்தமையை கவனத்தில் கொள்ளப்படல் அவசியம். அந்தவகையில் இந்தியாவை ஆட்சிபுரிந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களின் அனுசரனையுடன் "த:.வா" பணிக்காக வடக்கிலிருந்து இஸ்லாமிய சமயப் பெரியார்கள் வந்ததின் காரணத்தால் இப்பெயர் இயல்பாக ஏற்பட்டிருக்கலாம்.

இவ்வாறு வடக்கிலிருந்து வந்தவர்கள் தென்கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள பெண்களை மணந்து குடியாட்டமாக வாழ்ந்துள்ளார். இச்சந்தர்ப்பத்தில் அப்பெண்கள் இங்கு பேணப்பட்டு வந்த குடியைச் சேர்ந்தவர்களாக இருந்திட்ட போதிலும், அவர்களை திருமணம் முடித்த வடக்கிலிருந்து வந்தவர்களின் முக்கியத்துவம் கருதி "வடக்கனா குடி"யினர் என அழைக்கப்படலாயினர்.

நாம் மேலே பார்த்த "இலவ வடக்கனா குடி", "லெவ்வை வடக்கனா குடி" என்ற பெயர்களுக்கான காரண காரியத்தை ஆராய்வோம். வடக்கிலிருந்து வந்த த:.வா பணியாளர்களில் ஒருவர் "இலவ" மரத்தடியிலிருந்து பாங்கு சொல்லி மக்களை சமய அறிவை கொடுப்பதற்காக அழைத்துள்ளனர். சபைகளில் அமைதியை ஏற்படுத்துவதற்காக பாங்கு சொல்லி இகாமத்து சொல்லி நிலமையை கட்டுக்கோப்புக்குள் கொண்டுவருவது இன்றும் வழக்கம். முஸ்லிம்கள் பாங்கு, இகாமத் சொல்லப்படும் போது அதற்கு மரியாதை வழங்குவது காலங்காலமாக பின்பற்றப்படும் நடைமுறையாகும். எனவே வடக்கிலிருந்து வந்த த:.வா பணியாளர்கள் இவ்வணுகு முறையைப் பின்பற்றினார். அதனால் "இலவ வடக்கனா குடி"யினர் என அழைக்கலாயினர்.

"லெவ்வை வடக்கனா குடி" என்பதற்கும் இக்குடியைச் சேர்ந்தோர் காரண காரியங்களை முன்வைத்தனர். வடக்கிலிருந்து வந்த த:.வா பணியாளர்கள் பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தியவர்களாகவும் ஜும்ஆத் பிரசங்கம் நிகழ்த்தியவர்களாகவும் காணப்பட்டனர். அதனால் அவர்களை "லெவ்வை வடக்கனா குடியினர" என்றும் அழைக்கப்பட்டனர். சம்மாந்துறையில் முதல் ஜும்ஆப் பிரசங்கம் நிகழ்த்தியுவர். வட்க்கனா குடியைச் சேர்ந்தவர்தான் என்பதை ஒரு மூதாட்டி வற்புறுத்திக் கூறினார். அதற்கான ஆதாரம் ஒன்றையும் முன்வைத்தார். ஜும்ஆப் பிரசங்கம்

ஒரு கோலை கையில் பிடித்துக்கொண்டு
நிகழ்த்தும் இமாம் "ஆசாக்கோல்" என்றழைக்கப்படும் புத்தகத்தை (கிதாபை) வைத்துக் கொண்டு
வடிவான இடைவெளியில் பிரசங்கத்துக்குரிய குறிப்பு குலவிருதாக "ஆசாக்கோ
பிரசங்கம் நிகழ்த்துவார். அதனால்தான் வடக்கனா குடிக்கான குறிப்பாக மாடுகளு
பயன்படுகின்றது. இக்குடியைச் சேர்ந்தோர் தமது கால்நடைகளுக்கு
அடையாளம் இடும் போது ஆசாக்கோல் அடையாளத்தைப்பொறிப்பர்.

வடக்கனா குடி இன்று சம்மாந்துறையில் அருகிச் செல்வதாகவும் அதற்கான காரணத்தை
மற்றைய குடியைச் சேர்ந்த மூதாட்டிகள் பரம்பரை பரம்பரையாக கதைக்கப்பட்டு வரும் செய்தி
தந்தனர். இக்கருத்தை வடக்கனா குடியைச் சேர்ந்தவர்களும் ஒப்புக் கொண்டனர். வெளியூரிலிரு
வந்த மௌலானா ஒருவர் சம்மாந்துறையில் தங்கிவிட்டார். சமயச் சொற்பொழிவுகள் செய்
வைத்தியச் செய்தும் செல்வாக்குள்ளவர்களாகக் காணப்பட்டார். அவர் வடக்கனா குடியைச் சேர்
ஒரு பெண்ணை திருமணம் முடிக்க விருப்பப்பட்டார். ஆனால் அப்பெண்ணின் உறவி
"வந்தவர்க்கெல்லாம் வாய் இழிக்கிற குடியாட்கள் நாங்களல்ல" எனக் கூறி மௌலானாவ
விருப்பத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் மனவருத்தப்பட்ட மௌலானா மனவரு
சாபமிட்டதனால் தான் இக்குடிக்கு சந்ததிகள் குறைந்து போவதற்கு காரணம் என்கின்றனர்.

இக்குடியினர் சம்மாந்துறையில் மாத்திரமல்ல அக்கறைப்பற்று மாவடிப்பள்ளி பொத்துவ
சாய்ந்தமருது மருதமுனை அட்டாளைச்சேனை போன்ற ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றனர். த
பிரதேசங்களில் இக்குடி வழக்கத்தில் இல்லை.

இக்குடி வழக்கத்திலுள்ள பிரதேசங்களில் விசாரித்தபோது த.்.வா பணிக்காக வடக்கிலிரு
வந்தவர்களின் சந்ததியினரே என்பர். பொத்துவில் பிரதேசத்தில் விசாரித்தபோது இக்குடியி
ஆரம்பகாலங்களில் தமது எல்லாக் காரியங்களையும் வடக்கு திசையை கவனித்துத் த
ஆரம்பித்து வந்துள்ளனர் என்ற தகவலும் பெறக்கூடியதாக இருந்தது.

இக்குடியின் மரைக்காராக இருந்த அல் ஹாஜ் MI.சீனி முஹம்மது அவர்கள் பள்ளிவாசல்கள்
குறிப்பாக பெரிய பள்ளி வாசலில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மும்முரமாக இயங்குபவர் என்பு
"ஹிலால் பள்ளிவாசலின்" தோற்றத்திற்கு காரணகர்த்தாவாக திகழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கு

தற்போதைய மரைக்காரான அல் ஹாஜ் AL.அப்துல் றஹ்மான் மௌலவி அவர்கள் சம்மேள
நிகழ்ச்சிகளில் கூடிய அக்கறை காட்டுபவர் என்பதும் நம்பிக்கையாளர் "மஜ்லிஸ் அஷ்ஷூ
பொதுமக்கள் ஆகியோர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளை முன்னின்று சமரசப்படுத்து
என்பதும் இவரின் திறமையை உணர்ந்த சம்மேளனத்தினரும் இவரின் பெயரை முன்மொழிவ
அறிந்து சந்தோஷப்படுகிறோம்.

தகவல் வழங்கியோர் :

1. அல் ஹாபிஸ் மௌலவி A.இப்றாஹிம், 78வேம்பியடி வீதி,சம்மாந்துறை-04.
2. ஜனாப் A L.அப்துல் மஜிட், மார்க்கட் 7ம் ஒழுங்கை சம்மாந்துறை.

FOR REFERENCE USE ONLY

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai
11 NOV 2011
அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை -சம்மாந்துறை

THIS IS YOUR BOOK PLEASE KEEP CLEAN



## மாந்தரா குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**
அல் ஹாஜ் முஹம்மதலியார் கலந்தர் லெவ்வை.(குழந்தைமரைக்கார்)
பஸார் வீதி சம்மாந்துறை 02.
TP.NO: 0672261110

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. பக்கீர்த்தம்பி (ஹாறர் பக்கீர்).
2. இஸ்மாலெவ்வை (நத்தார்).

தொழில்முறையில், செல்வாக்குள்ளவர்களின் பெயர் வழியில், இடத்தினதும் செல்வாக்கு உள்ளவர்களினதும் பெயர் கலந்த வகையில் குடிகளின் பெயர் இருப்பதைக் காண்கின்றோம். ஆனால் முழுக்க முழுக்க ஒரு இடத்தினது, ஊரினது பெயரைத் தாங்கியதாக குடிக்கு பெயர் இருக்கின்றதென்றால் அது "மாந்தரா குடி"யைத்தான் குறிப்பிடலாம்.

நமதூரில் வெளியூர்களில் இருந்து திருமணமுடித்து வாழ்பவர்களை அவர்களது ஊரின் பெயரை சுட்டி இனங்காண்பது வழக்கம். அந்தவகையில் மாவடிப்பள்ளியர், கரவாகர், கொழும்பார், காலியார் என்றெல்லாம் அழைக்கப்படுவர். "மாந்திராவ", "பாணகமுவ" என்பன ஒருஊரின் இரண்டு பெயர்கள். ஒரு ஊருக்கு இரண்டு பெயர்கள் இருப்பது விஷேடமானது. அந்தவகையில் சம்மாந்துறைக்கும் மட்டக்களப்புத்தரவை என்ற பெயரும் இருந்துள்ள வரலாற்றை சம்மாந்துறை வரலாற்றில் பார்த்திருக்கின்றோம். இது போல் பல இடங்களில் ஒரு ஊருக்கு வேறு பெயர்கள் இருப்பதும், பெயர்கள் மாற்றப்பட்டிருப்பதும் நாம் காணும் சம்பவங்களாகும்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள மிகவும் பெரிய முஸ்லிம் கிராமங்களில் ஒன்றுதான் "பாணகமுவ என்னும் மாந்திராவ" ஊராகும். குருநாகல் மாவட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றாகவும் கணிக்கப்படுகின்றது. நேரடியாக அரேபிய தலைமுறையினரைக் கொண்டு முஸ்லிம் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றையும் காண்கின்றோம்.

"மாதத்தாவெவ" என்ற ஒரு குளம் அமைந்திருந்த இடத்தில் தான் இன்று மாந்திராவ ஊர் அமைந்துள்ளது. "மா தத் எத்தா வெவ" பெரிய தந்தமுடைய யானைக் குளம் என்ற சிங்களச் சொல்லின் திரிபுதான் "மாந்தராவ" என்பதாகும். மகா வம்சத்திலும் இக்குளம் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. குளத்தின் கிழக்குத் திசையிலிருந்த அணைக்கட்டு உடைப்பெடுத்து நீர் முற்றாக வெளியேறியதினாலும் அணைக்கட்டு மீண்டும் பராமரிக்கப்படாமையினாலும் குளம் தூர்ந்து தரிசுநிலமாக மாறிக்கொண்டுவந்தது.

அண்மைக்காலமாக "மாந்திராவ"என்னும் பெயர் வழக்கொழிந்து ஓரங்கட்டப்பட்டு வருவதையும், "பாணகமுவ" என்றபெயரே நிலைபெற்று வருவதையும் அவதானிக்கலாம். இங்கிருந்து அண்மை கிராமங்களிலும், அயல் மாவட்டங்ககளிலும் வேறு மாகாணங்களிலும் திருமணம், தொழில் முறையில் இடம்பெயர்ந்து குடியேறியவர்களை அவ்வூர் மக்கள் "மாந்திராவ" என்பது மருவி "மாந்திரா குடி" யினர் என அழைக்கின்றனர்.

இவ்வாறு குடியேறியவர்கள் சம்மாந்துறை, அக்கறைப்பற்று, பாலமுனை, பொத்துவில், சாய்ந்தமருது, இறக்காமம், மருதமுனை போன்ற பிரதேசங்களில் "மாந்திரா குடி" யினர் என அழைக்கப்பட்டு வருகின்றனர். தென்கிழக்குப் பிரதேசத்தில் மாந்திராவ மக்களின் பிரவேசம் வியாபாரம், தொழில் சார்ந்தவையாக இருந்துள்ளமை அறியமுடிகின்றது. ஐரோப்பியருடைய வருகைக்கு முன்பிருந்தே அரேபியருடைய தொடர்புகள் இலங்கையில் நிகழ்ந்திருக்கிறது. இப்னு பத்தூதா, பாவா ஆதம்மலையைத் தரிசித்தது போன்ற சான்றுகள் அனேகம். இவ்வாறு எந்த அரேபியர்களுடைய நாணயம், வீரம், விசுவாசம், மார்க்க நடைமுறைகள் என்பன சிங்கள மக்களையும், பிரதானிகளையும், அரசனையும் கவர்ந்ததில் வியப்பில்லை. இதனால் அரசனுடைய மெய்க்காப்பாளர்களாக அராபிய இளைஞர்கள் கடமைபுரியிலாயினர். அரச சபைகளில் ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர். இவ்வராபிய இளைஞர்கள் சில காலத்தின் பின்பு தமது எதிர்காலம், திருமணம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு நாடு திரும்ப முடிவு செய்தனர்.

இவர்களை இழக்க விரும்பாத அரசனும், பிரதானிகளும் இவர்களை இங்கேய நிரந்தரமாக இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். அரசனதும், பிரதானிகளினதும் குடும்பங்களிலிருந்து பெண்களை தெரிந்தெடுத்து திருமணம் முடித்துக் கொடுத்ததுடன், நாம் முன்பு பார்த்த மாந்திராவ நிலத்தை "ஸன்சல" (எதுவித வரிகளுமல்லாத) உரிமைப் பத்திரம் மூலம் அன்பளிப்புச் செய்து

கௌரவமாக, அரேபியா இளைஞர்கள் தாம் திருமணம் முடித்த சிங்கள உயர்குடி பெண்களு மத்தியில் குலப்பெருமை மிகு வாழத் வழிவகுத்தனர். அன்று சிங்கள மக்கள் உச்சநிலையிலிருந்தது. "கொய்கம", "முதியன்ஸே" அவற்றில் சில. இவ்வாறு குடியமர்த்தப் மரியாதைகளுடன் கணிக்கப் அரேபிய இளைஞர்களும் உயர்குலத்தவர்களுக்குரிய அழைக்கப்படலாயினர். இறுதிக் கண்டிமன்னன் ஸ்ரீவி "முதியன்ஸே" என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப்படலாயினர். இறுதிக் கண்டிமன்னன் ஸ்ரீவி ராச சிங்கன் அரச சபையில், அரசனது நெருங்கியவர்களுள் "தம்பி முதியன்ஸே " என் முஸ்லிம் ஒருவர் இருந்துள்ள வரலாறும் உண்டு. கண்டி, குருநாகல் முஸ்லிம் கிராமங்க அவர்களது பெயர்களுக்கு முன்னால் "முதியன்ஸே" என்று சிலரிடம் இருப்பதைக் காண இவ்வாறு கௌரவமாகவும், உயர் குலத்தவராகவும் மதிக்கப்பட்டு மாந்தராவையில் குடியமர்த்தப் வாழ்ந்து வந்தவர்களின் சந்ததியினரே, குடிபெயர்ந்ததின் காரணமாக தென்கிழக்குப் பிரதேசத்தி அவர்களது ஊரின் பெயரைக் கொண்டு அழைக்கப்படலாயினர். தாய்வழிக் குடிமுறை இ பின்பற்றப்பட்டு வந்தமையினால் மாந்தராவையிலிருந்து வந்தவர்களையும் "மாந்திரா குடி" யினர் அழைக்கப்படலாயினர். "மாந்தரா குடியான் மான் கொம்பில் நெருப்பு எடுப்பவன்" என்று பெருமை கூறுவதுமுண்டு.

இக்குடியின் மரைக்காரான அல் ஹாஜ் M.கலந்தர் லெவ்வை அவர்கள் நீண்டகால குடிமரைக்காராக இருந்து வருபவர் என்பதும் குடி மரைக்கார் சம்மேளனத்தின் செயற்பாடுக மிகவும் ஈடுபாடு காட்டும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

**தகவல் வழங்கியோர் :**

1. MA.அப்துல் ஹமீட், பஸார் 4ம் ஒழுங்கை, சம்மாந்துறை.
2. MA.அப்துல் நாசர், பஸார் 4ம் ஒழுங்கை, சம்மாந்துறை.



## செட்டிபுள்ள குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**

அல் ஹாஜ் முஹம்மது தம்பி ஆதம் லெவ்வை தம்பிக்கண்டு, (BA.Dip.Edu)
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்,
ஆயிஷா மன்சில், சம்மாந்துறை-06.
TP.NO: 0771602113.

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. AL.அப்துல் ஹமீது ஆலிம்.
2. மூசியர், கிராமக் கோட்டடியில் வசித்தவர். (பெயரை அறிந்து கொள்ள முடியவில்லை)
3. AP.கலந்தர் லெவ்வை. (ஓயாமாரியார்)
4. MP.அகமது லெவ்வை. (குஞ்சகமது என அழைக்கப்பட்டவர்)
5. முகம்மதலி முகம்மதுத்தம்பி. (வவ்வியர்)

"செட்டி" என்னும் பதம் இந்துக்கள் மத்தியில் பிரபல்லியமானது. இந்தியாவில் செட்டியார் சாதியினர் உயர்ந்த சாதியாராக கணிக்கப்படுகின்றனர். "வணிகர்" களையும் அதாவது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களையும் செட்டியார் என்றே அழைக்கப்பட்டனர். கொழும்பில் செட்டித்தெரு, செட்டியார் தெரு என்ற பெயரில் ஒருவீதிக்கு பெயர் இருப்பதையும் அறிவோம். இந்துக்கள் வழிபடும் தெய்வங்களில் ஒன்றான "முருகனையும்" "செட்டி" என அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு செட்டி எனும் பதம் பெரு மதிப்புக்குரிய ஒருபிரிவினரைக் குறிப்பிடபிடுவதை அவதானிக்கலாம்.

அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆப்பள்ளி, பெரியபள்ளி (ஜும்ஆப்பள்ளி) இரண்டு பள்ளிவாசல்களினாலும் எமக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி செட்டிபுள்ள குடியொன்றோ, செட்டி குடியென்றோ, செட்டியார் குடியென்றோ எந்தப் பெயரிலும் அப்படியொருகுடி அக்கரைப்பற்றில் இருப்பதாக இல்லை. ஆனால் "ARM.சலீம்" எழுதிய அக்கரைப்பற்று வரலாறு என்னும் நூலில் 117 ஆம் பக்கத்தில் "செட்டியார் குடி" என்றொரு குடியைக் குறிப்பிடுகின்றார்.

சிலவேளை அக்கரைப்பற்றில் இக்குடி தற்போது அருகியுள்ளதோ? தம்பிலுவில், திருக்கோயில், அக்கரைப்பற்று தமிழ் பகுதி, காரைதீவு போன்ற தமிழ் பிரதேசங்களில் "செட்டி குடி" என்ற பெயருடன் குடி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் பிரதேசங்களில் சம்மாந்துறையில் மாத்திரம்தான் "செட்டிபுள்ள குடி" என்ற பெயரில் குடி இருப்பதைக் காண்கின்றோம். மேலே குறிப்பிட்ட "செட்டி" என்ற பதத்துடன் "புள்ள" என்ற பதமும் இணைந்து அழைக்கப்படுகின்றது. "பிள்ளை" என்பதுதான் புள்ள என மருவிவந்துள்ளது எனக் கொள்ளலாம். இராசாம்புள்ள குடி, சுல்தான்புள்ள குடி, உதுமான்புள்ள குடி போன்ற குடிகளுக்கும் "புள்ள" என செல்லமாக இணைக்கப்பட்டுள்ளதையும் அறிவோம். உம்மாப்புள்ள, வாப்பாபுள்ள, காக்காபுள்ள, லாத்தாபுள்ள, மாமாப்புள்ள என நமது உறவினர்களை அன்பு மிகுதியால் நாம் அழைப்பதுண்டல்லவா? புள்ள என்ற பதத்துக்கு பால் வித்தியாசம்கிடையாது. என்றாலும் தாய்மார் தனது பெண்மக்களை "புள்ள" என்றுதான் அழைப்பதை அறிவோம்.

சம்மாந்துறையில் செட்டி குடி எவ்வாறு செட்டிபுள்ள குடியாக மாற்றமடைந்தது என்பது பற்றி ஆராய்வோம். அல் ஹாஜ் K.முகையதீன்பாவா (வயது76) வளத்தார் நாகூரார் என்றழைக்கப்படுபவர் தனது குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக வாய்வழிவந்த சம்பவத்தைக் கூறினார். சம்மாந்துறையைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரி, அல்லது வெளிநாட்டு முஸ்லிம் வியாபாரி புடவை வியாபாரத்துக்காக சம்மாந்துறையிலிருந்து தனது உதவியாளர்களுடன் வியாபாரத்துக்காக செல்வது வழக்கம். கோயில் திருவிழாக் காலங்களிலும், பெருநாட் காலங்களிலும், ஏனைய நாட்களிலும் தமது பிடவை பொருட்களுடன் செல்வர். இவ்வாறு பற்பல ஊர்களுக்கும் செல்வர்.

மட்டக்களப்பு வாவியூடாக சம்மாந்துறை துறைமுகத்தை வந்தடையும் வள்ளங்களிலிருந்து கொண்டுவரப்படும் பொருட்கள் கண்டி இராச்சியத்துக்கம், ஏனைய உள்ளூர் பிரதேசங்களுக்கும் எடுத்துச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவர். அன்று பிரயாண வசதிகள் குறைந்த காலமாகையால், இவ்வாறு வியாபாரத்துக்காக செல்பவர்கள் அவ்வப் பிரதேசங்களில் தங்களுக்கு பழக்கப்பட்டவர்களின் இல்லங்களில் பல நாட்கள் தங்கி தமது தொழிலை மேற்கொள்வர்.

இவ்வாறு வியாபாரத்துக்காக சென்ற ஒரு வியாபாரியும், அவரது குழுவும் படுவான் கரை பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். வழக்கம்போல தமக்குத் தெரிந்த

பரிச்சயமான ஒருவரின் வீட்டில் தங்கினர். ஹோட்டல்கள், லொட்ஜ்*கள் இல்லாத அக்காலத்
இப்படிப்பட்ட வியாபாரிகள் தாம் கொண்டு செல்லும் பொருட்கள் விற்று முடியும்
அன்னியோன்னியமானவர்களின் இல்லங்களில் தங்கிவருவது வழக்கம்.

நாம் குறிப்பிடும் இவ்வியாபாரி தங்கிய இடம் செட்டி ஒருவரின் அல்லது செட்டிக்குடியைச் சேர்
ஒருவரின் வீட்டில்தான். இவ்வியாபாரியின் ஒழுக்கம், நன்னடத்தை, வியாபார நேர்மை, நள்ளிர
விளித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபடல், சுத்தம் என்பன செட்டிக் குடும்பத்தைக் கவர்ந்த
அதிலும் விஷேடமாக அக்குடும்பத்தைச் சேர்ந்த இளவயது நங்கை ஒருவரை மிக மிக விரு
கொள்ளவைத்ததில் ஆச்சரியமில்லை.

இவ்முஸ்லிம் வியாபாரியினதும், செட்டி குடும்பத்து பெண்ணுக்கும் இடையில் நல்
வளரத்தொடங்கியது. காலவோட்டத்தில் செட்டி குடும்பத்துக்கு தெரிய வந்தது. ஆரம்பத்தில் செ
குடும்பம் எதிர்ப்புத் தெரிவித்தாலும், கடைசியில் ஒத்துப்போக சம்மதித்தனர். ஏனென்றால் இவ்வா
சம்பவங்கள் அதாவது முஸ்லிம் தமிழ் திருமண உறவுகள் அனேகமாக முன்பு நடைபெற்றிருந்த
இவர்களது திருமணத்துக்கும் பெற்றார் அனுமதி வழங்கியதுடன், அவர்களை வாழ்
சம்மாந்துறைக்கு வழியனுப்பிவைத்தனர்.

இவர்கள் சம்மாந்துறையில் குடும்பமாக சீவித்து வாழத்தலைப்பட்டனர். இவர்களது சந்ததியின
"செட்டிபுள்ள குடியினர்" என அழைத்தனர். செட்டியினுடைய மகள் "புள்ள" செட்டிபுள்ள
எனலாயிற்று. இக்குடி முஸ்லிம் பிரதேசங்களில் சம்மாந்துறையில் மாத்திரம் வழக்கத்திலிருப்ப
அவதானிப்போமாக.

**தகவல் வழங்கியோர்:**

1. MA.உதுமாலெவ்வை, சம்மாந்துறை-01
2. KL.அப்துல் மஜீத்(Rtd GNS)



## உதுமான்புள்ள குடி

**இக்குடியின் தற்போதைய குடிமரைக்கார்:**
ஆதம் லெவ்வை முகம்மது அலி
97/1 ஈஸா லேன், சம்மாந்துறை-01.
TP. No: 0673670793

**இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்:**

1. முஹம்மதிஸ்மாயில் (கண்ணாடி மரைக்கார்)
2. உதுமாலெவ்வை (குருவி உதுமார்)
3. வெள்ளத்தம்பி (குருவி உதுமார் மருமகன்)

உதுமான்புள்ள எனக்குறிப்பிடப்பட்டிருந்தாலும் இப்பெயர் ஆணைக்குறிக்கின்றது என எண்ணத் தோன்றும். ஆனால் உதுமானிய்யா என்ற பெண்ணைச் சுட்டித் தான் இக்குடிக்கு "உதுமான்புள்ள குடி" என வழங்கப்படலாயிற்று.

காத்தான்குடி பிரதான வீதியில் அடக்கப்பட்டிருக்கும் குழந்தையும்மா கபுரடி நமக்கெல்லாம் நன்கு அறிமுகமான ஒரு இடமாகும். சென்ற காலங்களில் இக்கபுரடியை தரிசிக்க பல ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து செல்வது வழக்கமாக இருந்து வந்துள்ளதை கேள்விப்படுகின்றோம். ஏன் சம்மாந்துறையிலிருந்தும் சென்று வந்துள்ள விபரத்தை முதியோர் குறிப்பிடுகின்றனர். விஷேடமாக இக்கபுரடியைத் தரிசிக்க பெண்கள்தான் அதிகமாக செல்வது வழக்கம். மார்க்க விழிப்புணர்வு ஏற்பட்டதன் காரணத்தால் வெளியூர் வாசிகள் செல்வது முற்றாக நின்று விட்டது.

உதுமானிய்யா குடிக்கும் குழந்தையும்மா கபுரடிக்கும் என்ன சம்பந்தம்? என கேள்வி எழலாம். காத்தான்குடிதான் இக்குடிக்கான ஆரம்பம் என்பதை விளக்குவோம். குழந்தையும்மா என்பவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். ஒருவர் மகுமூதா, மற்றவர் உதுமானிய்யா. மகுமூதா என்பவரின் வரலாறு தெரியவில்லை. உதுமானிய்யா என்பவரின் சந்ததிகளிருந்தே உதுமான்புள்ள குடி தோன்றலாயிற்று. சம்மாந்துறையில் உதுமான்புள்ள குடி என்றழைக்கப்பட்டாலும், நிந்தவூரில் உத்துப்புள்ள குடியென்றும், அட்டாளைச்சேனையில் உதுமான்போடி குடியென்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. காத்தான்குடி நாவற்குடாவில் அடங்கப்பட்டிருக்கும் "புளியன் போக்கன் அப்பாவும்", காத்தான்குடி மையவாடியில் அடங்கப்பட்டிருக்கும் "நாகையடி அவுலியா" என்பவரும் உதுமானியா என்னும் பெண்ணின் ஆண்மக்களாவர். இவர்களது பரம்பரையில் வந்தவர்களில் அனேகமானோர் மஸ்தான்களும், பாவாக்களும், இறைநேசர்களுமாவார்.

உதுமான்புள்ள குடி சம்மாந்துறையில் வேரோடியதற்குக் காரணம் முகைதீன் பாவா மரைக்காயர் (கண்ணாடி மரைக்கார் தகப்பன்), முன்னிச் சுலைமான் கோசி, முஸ்தபா ஆலிம் என்பவர்களின் வழித்தோன்றல்கள் உதுமான்புள்ள குடியினர். மேற்படி நபர்கள் காத்தான்குடியில் உதுமானியா குடிப்பெண்களை திருமணம் முடித்து சம்மாந்துறையில் வாழ்ந்து வந்தமையினால் உதுமான்புள்ள குடி இங்கும் நிலைபெறலாயிற்று. "பிள்ளை" என்பதுதான் "புள்ள" என மருவிவந்துள்ளது. உறவுமுறையிலான மரியாதைக்குரிய ஒரு குறியீடுதான் உதுமான்புள்ள என்பதாகும்.

சம்மாந்துறையில் வண்டில்கள் அவ்வளவு புளக்கத்தில் இல்லாத காலம். வண்டில் செய்வதில் அக்காலத்தில் காத்தான்குடி பிரபல்யமான இடமாக இருந்தது. சம்மாந்துறையில் இருந்து இரண்டு சகோதரர்கள் வண்டில் செய்வதற்காக காத்தான்குடிக்குச் சென்றனர். இவர்கள் சென்ற வண்டில் செய்யும் ஓடாவியின் குடும்பம் உதுமான்புள்ள குடியைச் சேர்ந்தவர்கள். போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் மூன்று, நான்கு வாரங்கள் அங்கேயே தங்கி வண்டில் செய்து வருவது வழக்கம்.

இப்படிச் சென்ற சகோதரர்கள் உதுமான்புள்ள குடியைச் சேர்ந்த பெண்கள் இருவரை திருமணம் முடித்து புது வண்டிலில் ஊர்வந்து சேர்ந்தனர். அவர்கள் சம்மாந்துறையில் வாழ்ந்து வந்தபடியால் அவர்களது பரம்பரையும் உதுமான் புள்ள குடியாக பல்கிப் பெருகின. இக்குடியின் சனத்தொகை குறைவாக இருப்பதினால் கவலையுற்ற மூதாட்டி ஒருவர் தனது மனவருத்தத்தை "நல்குடி நாசமற்று பழ்குடி பெருகிப் போகுது" என்று கூறியதாக வாய்வழிவந்த வார்த்தைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

**தகவல் வழங்கியோர்:**

1. யாசீன் பாவா முபாரக்,66/c புளக் ஜே மேற்கு சம்மாந்துறை
2. வெள்ளத்தம்பி ஹு*ஸைன் (புனர்வாழ்வு, புனருத்தாரன திணைக்களம்),
   97,ஈஸா லேன், சம்மாந்துறை.

## உலவிப்போடி குடி

இக் குடியின் தற்போதைய குடிமரைக்கார்
அல் ஹாஜ் அபூபக்கர் முஹம்மதுதம்பி(ஆலிம்)
281,ஆஸ்பத்தி 1ஆம் வீதி, சம்மாந்துறை-01.
TP.NO: 0672260974.

இக்குடியின் குடிமரைக்கார்களாக இருந்தவர்களின் விபரங்கள்

1. PL.முஸ்தபாலெவ்வை மரைக்கார் (1935-1950)
2. PL.முஹம்மதுதம்பி (1950-1975)

சம்மாந்துறையில் "உலவிப்போடி குடி" என்று அழைக்கப்படுவதை நற்பட்டிமுனையில் உலகிப்போடி குடி என்றும், முக்குவ குடிகளில் உலகிப்போடி, உலகநாச்சி குடி என்று இரண்டு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. சம்மாந்துறையில் உலவிப்போடி குடி "சாயக்காரன் குடி" என்று இன்னொரு பெயராலும் அழைக்கப்படுகின்றது. சாய்ந்தமருது, நிந்தவூர் பிரதேசங்களில் சாயக்காரன் குடி என்று மாத்திரம்தான் அழைக்கப்படுகின்றது.

வர்த்தக நோக்கமாகவும், பாவா ஆதம்மலையைத் தரிசிக்கும் நோக்கமாகவும் இலங்கைக்கு விஜயம் செய்த முஸ்லிம்களுக்கும், தமிழ் மக்களுக்கும், இடையில் எற்பட்ட நல்உறவின் அடிப்படையில் நடைபெற்ற திருமணங்களின் போதும், தமிழ் மக்களின் ஏழு குடிகளில் இருந்து பெண்கள் முஸ்லிம்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டன. அந்த ஏழு குடிகளில் ஒன்றாக உலகிப்போடி குடியும் இருக்கலாம். ஏனென்றால் இன்றுவரை இக்குடி உலகிப்போடி குடி என்பதும், சாயக்காரன் குடி என்பதும் முஸ்லிம் தமிழ் மக்களிடையே பரிச்சியத்திலுள்ள குடியாகும்.

நமது பிரதேசத்தில் இன்று வழக்கிலுள்ள 31 குடிகளில் மாமனாப் போடி குடி, உலவிப்போடி குடி என்ற இவ்விரு குடிகளும் "போடி" என்ற வார்த்தையின் ஊற்றாயிருப்பதைக் காண்கின்றோம். "முக்குவர்" குடிவகுப்பைச் சேர்ந்தோருக்கும்,பிற்காலத்தில் நிலபுலன்களை அதிகம் கொண்டோருக்கும் "போடி" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. நெற்செய்கைக்கு வேண்டிய முதலைப் போடுபவர் - பெருநிலக்கிளவர்-போடியார் என்று இன்றும் வழக்கில் உண்டு. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மாகாண சிறு பகுதி ஒன்றுக்கு நியமிக்கப்படும் அதிகாரி ஒருவரையும் போடி என்றே அழைத்தனர்.

ஒரு நாட்டார் பாடலில்,

"......போடியார் வீட்டுக்கு புதிர்காவியே போறோம்
போடியார் முன்னே போக முல்லைக்காரன் பின்னே வர
காணியில் விளைந்த நெல்லுக் காவிக் கொண்டு போகிறோம்"

இங்கு பூமிச் சொந்தக்காரரும் போடியார், அப்போடியாரின் வயல்களை குத்தகைக்கு எடுத்துச் செய்பவரும் போடியார் என அழைக்கப்படுவதை அவதானிக்கலாம். இன்றும் நமது பிரதேசங்களில் சிலரை போடியார் என்று அழைப்போம். ஆனால் அவரிடம் சிறு அளவிலேனும் நெல்வயல் இல்லாதிருக்கும். அவரது பரம்பரையின் முன்னோர் வயல் சொந்தக்காரர்களாக போடியார்களாக இருந்திருப்பர். அப்பரம்பரைப் பெயர் இவருக்கும் இன்றிருப்பதை அவதானிக்கலாம். "போடிமார் குடிமக்களுக்குத் தலைமைபூண்டு போஷிப்பவராதலினால் போடியார் என பெருமை கொள்ளலாயிற்று. பிற்காலத்தில் முஸ்லிம் பெயர்களைக் கொண்ட "போடி" குடிகள் தோன்றலாயின. அட்டாளைச்சேனையில் "உதுமான் போடி குடி", அக்கறைப்பற்றில் "உமர்கத்தாப் போடி" கத்தர குடி என்பனவாகும். இதுதவிர போடியார் கத்தர என்று பல பெயர்களில் பல பிரிவுகளையும் அறிகின்றோம். ஆனால் குடிகளில் பிளவுகளை ஏற்படுத்தவில்லை.

நமதூர் உலவிப்போடி குடிமரைக்கார் அல் ஹாஜ் A.முஹம்மதுத்தம்பி அவர்கள் உண்மைச் சம்பவம் ஒன்றைச் சொன்னார். 1962ம் ஆண்டு நானும் எனது மாமனும் மாடுகள் வாங்குவதற்காக படுவான் கரைக்கு (வெல்லாவெளிக்கு) முதன்முதலாக சென்றதாகவும், (மாமன் பல முறை சென்றுள்ளார்) அங்கு ராசா என்பவரின் வீட்டின் வளவில் வேறாகக் கட்டப்பட்டிருந்த வீட்டில் தங்கியதாகவும் கூறினார். நாய் புழக்கம் முஸ்லிம்களுக்கு பொருந்தாது என்பதால் அவ்வேறபாடு செய்யப்பட்டிருந்தது. தொழுவதற்கும் சமைப்பதற்கும் உறங்குவதற்குமாக இவ்வேறபாட்டை ராசா செய்திருந்தார்.

ராசா என்பவரும் உலவிப் போடி குடியைச் சேர்ந்தவர். அவரும் அவரைச் சேர்ந்தோரும் அடிக்கடி சம்மாந்துயைக்கு வரும்போது எமது வீட்டிலேயே தங்கிச் செல்வதுமுண்டு எனக் கூறினார்.